திராவிடநாடு

7—6—59 | வாரவெளியீடு | விலை 16 காசு

போர்ப்பரணி பாடு!

[ஆ. ஆரிது]

தெருவினில் நீநின்று பாடு—வெளித்
திண்ணையில் ஏறியே பாடு!

கருவிரில் ஏற்றியே பாடு—உயர்
கட்டியங் கூறியே பாடு!

உருவினை உயர்த்திநீ பாடு—தமிழ்
உயர்வினை உலகறியப் பாடு!

திருவிடம் திருவிடம் என்றே—நீ
திண்டோள்கள் வீங்கிடப் பாடு!

செந்தமிழின் தேனூற்றைப் பாடு—பழஞ்
செழுமையினை வேதனையில் பாடு!

சிந்தனை விருந்துண்ணப் பாடு—பழஞ்
சீர்த்தியினை நீவிரைந்து தேடு!

சொந்தநம் அன்னையின் நாடு—இன்று
சொல்லொணா வேதனையின் வீடு!

இந்தநம் இழிநிலையைச் சாடு—உடன்
எழுச்சிக்கு வித்திட்டுப் பாடு!

தமிழினம் தலைநிமிரப்பாடு—அவர்
தன்மானம் காத்திடப் பாடு!

தமிழன்னை மகிழவே பாடு—உயர்
தமிழெங்கள் வாழ்வென்று பாடு!

தமிழினை விடுத்திங்கு இந்தி—என்ற
தறுதலை மொழியினை வேண்டும்

தமிழனும் வாழ்கிறான் ஐயோ!—அவன்
சாய்ந்தொழிய நீஅறம் பாடு!

வாலிபமே! வளர்வாய்!!

புதியன பல, பூத்துக்கொண்டேயிருக்கும் காட்சிகள் தென்படத் தென்பட, புதுவேகமும் பூரிப்பும் ஏற்படுகிறது நமக்கு! அரசாள்வதும், செங்கோல் பிடிப்பதும், சரிகைக் குல்லாய்களும், ஜமீன்களும் செய்யவேண்டிய காரியம் என்பதுபோய், மக்களின் மனமே தராசுகோல் எனும் புதுநிலை, பூத்துக்கொண்டேயிருக்கிறது உலகில்!

சென்னை மாநகராட்சியில், தி.மு. கழகம் அமரும் நிலை உண்டானபோது, திருமணம் செய்துகொள்ளும் வாலிபனின் நிலை பெற்றோம் நாம். குடும்பமெனும் பொறுப்பினை ஏற்கப்போகிறோமே, நமக்குப் பக்கபலம் கிடையாதே, நாமே முயன்றுதானே குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று சாதாரண நிலையிலுள்ள எந்த இளைஞனும் யோசிக்கத்தான் செய்வான். சீமானின் செல்வனுக்கு, திருமணம் ஒருவிளையாட்டு! ஆனால் பொறுப்புள்ள ஏழைக்கு!! கவலையும் அச்சமும், எந்தப் பொறுப்புள்ளவனுக்கும் உண்டாகத்தான் செய்யும். ஆனால் அதற்காக; வயது வந்த எந்த வாலிபனும் பொறுப்பை ஏற்காமலா தள்ள முடியும்? தகுதிபெற்றுவிட்ட, அரசியல்கட்சியின் நிலையும் அதுதான்!!

"பழக்கமில்லாதவர்கள் ஆள வருவதா?'' என்று ஈட்டியை எடுத்து வீசத்தான் செய்வர்! நமது மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பெரிய இடத்திலிருப்போர், ஏதாவது சொல்லவேண்டுமேயென்பதற்காக, புத்திமதிகள் கூறுவதுபோல, தங்களது எரிச்சலைக் காட்டிக்கொள்ள முன்வந்தனர். புதுக் குடித்தனம் செல்வோருக்குப் புத்திமதிகள் அவசியம்தான்! இருந்தாலும், "என்னமோப்பா! சம்சார சாகரத்தில் குதிக்கிறாய். ஊம்... பார்ப்போம்'' என்று பெருமூச்சு விடுவது, இவனுக்கும் கலியாணமா, என்று நினைப்போரின இழிச் செயலாகும்.

பெருமூச்சும், கவலையும், வயதான கட்சிகளுக்கும், வயதான பழசுகளுக்கும் இன்று உலகின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுக் கொண்டுள்ளன. பழைய அரசியல் பரம்பரை ஒழிந்து, புதிய பரம்பரை உருவாகிக்கொண்டிருக்கிறது—பழைய ஆட்சிகள் ஒழிந்து புதிய ஆட்சிகள் மலர்வதைப்போல! இப்படி உருவாகும் புதிய பரம்பரைக்கு அநேகமாக வாலிபர்களே, தலைவர்களாகவும், ஆட்சி செலுத்துவோராகவும், அமர்கிறார்கள்!!

"பொடிப் பசங்க! சின்னப்பசங்க! என்ன தெரியும் இதுகளுக்கு? இதுகளா கட்சி நடத்தமுடியும்?'' என்று பெரியார் அவர்கள் நம்மைச் சபித்தபோது, பலருக்கு ஆத்திரம் ஏற்பட்டதுண்டு. இதுபோல, பெரியார் மட்டுமல்ல, வயதானவர்கள் யாருமே, வாலிபர்கள் நிரம்பிய கட்சியை அலட்சியத்துடன்தான் பார்க்கிறார்கள்.

ஆனால், வாலிபம் வெல்கிறது! தளிர்நடை போடுகிறது! காரியத்தையும் சாதிக்கிறது!!

இந்தக்கிழமை, **சிங்கப்பூரிலே** புதியதொரு கட்சியொன்று, பெருமிதமான வெற்றிபெற்று, ஆட்சிக்கோலை ஏந்துகிறது. "PAP'' என்று சுருக்கமாக அழைக்கப்படும் **"மக்கள் கட்சி"** அது வாலிபர்களின் முகாமாகும்! அது பெற்ற வெற்றியைச் சற்றேறக்குறைய நாம் சென்னையில் பெற்ற வெற்றியுடன் ஒப்பிடலாம்! பணபலமோ, பக்கபலமோ, இல்லாத கட்சி அது; ஆனால் வாலிபர்களின் கூடாரம்!! இளைஞர்கள் இருக்கிறார் எனின், அக்கட்சி, எண்ணங்களைத்தானே கொள்கையாகக் கொண்டிருக்கும். அக்கட்சியை நிறுவியவர்களில் ஒருவரும், தற்சமயம் அக்கட்சியின் தலைவராக இருப்பவருமான டாக்டர் **டோசின்சியே** என்பாருக்கு, வயது 37-தான் ஆகிறது. கட்சியின் பொதுச்செயலாளரும், இப்போது சிங்கப்பூரின் முதலமைச்சராகியிருப்பவருமான **லீக்வான்யீ** என்பார், தலைவரைவிட, இளையவர்தான். என்றாலும், இவர்கள் பெற்றிருக்கிற வெற்றி சாதாரணமானதல்ல! விளம்பரமும் உலகத்தின் கவனமும் பெற்ற முன்னாள் முதலமைச்சர் **லிம்யூகாக்கின்** கட்சியிடமிருந்து சிங்கப்பூர் அரசியலை இந்த இளைஞர்கள் பெற்றுவிட்டார்கள்! இவர்களில் எவரும், ஆட்சி நடத்தும் விதம்பற்றி அறியார்: எனினும், ஆட்சியில் அமரப் போகிறார்கள்!!

எப்படி இவர்கள் வெற்றிபெற்றார்கள்?— இதுதான், சிங்கப்பூரிலேயுள்ள, பழையவர்களின் ஆலோசனை. ஏடுகள் யாவும் ஆச்சரியத்தைத் தெரிவிக்கின்றன. எப்படியய்யா இவர்களால் ஆட்சிநடத்த முடியும்?—என்று உடனே சந்தேகக் குரலை எழுப்புகின்றன. "ஊம்! பார்க்கலாம். படபடவென்று இந்த வாலிபர்கள் பேசினார்கள். ஓடு ஓடென்று, ஒவ்வொரு வீடாக ஓடினார்கள். மக்களின் உணர்ச்சியைக் கிண்டிவிட்டார்கள். ஓட்டுக்களைக் கொண்டுவந்து குவித்தார்கள். இப்படி வெற்றிபெற்றுவிட்டால் போதுமா? சொன்னபடி ஆள வேண்டாமோ? பார்க்கலாம்!,'' என்கிறார்கள், கோட்டைவிட்டவர்கள். கவர்னர், வாலிபச் செயலாளரை அழைத்து, மந்திரி சபை அமையுங்கள் என்றிருக்கிறார். உடனே, அந்தச் செயலாளர், "மந்திரி சபை பிறகு. முதலில் பாதுகாப்புக் கைதியாக எங்கள் கட்சியைச் சார்ந்த எட்டு பேரைப் பிடித்து அடைத்திருக்கிறீர்களே? அவர்களை விடுவிக்கவேண்டும். பிறகுதான் பேச்சு!'' என்று கூறியிருக்கிறார். கவர்னர் சம்மதித்து, அவர்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. பிறகுதான் மந்திரி சபை அமைக்கும் பொறுப்பைக் கட்சியினர் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

தங்கள் மந்திரி சபையின் பட்டியலை அவர்கள் எங்கு அறிவித்தார்கள் தெரியுமா? பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திலல்ல! புதனன்று, மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தி, அந்த வெற்றி விழாவில், இவரிவர்கள்தான் மந்திரிகளாக வரப்போகிறார்கள் என்பதை அறிவித்திருக்கிறார்கள்!! பொதுமேடைதான் இந்த வாலிபக் கட்சிக்கு வலிவுள்ள பிரச்சார சாதனமாகும். இந்தச் சமயத்திலும், அதைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை.

வளரும் உலகில், வாலிபத்தினருக்கு, எவ்வளவோ பொறுப்புகள் ஏற்பட இருக்கின்றன! நமது கழகம் வளரும் வேகத்தைப் பார்க்கிறபோது, எதிர் காலம் எப்படிப்பட்டதாயிருக்கும் என்கிற அறிகுறி நன்றாகத் தெரிகிறது!! அதற்கு தகுதியுடையவர்களாக, நம்மில் ஒவ்வொருவரும்— கிளைக் கழகங்களும், உட்கிளைகளும், இப்போது முதலே தயாராகவேண்டும். ஏசுவோர் ஏசட்டும்! எதிர்காலம் நமதுதான்!!

★

"சம்மதம் தந்துவிட்டார்கள்!"

மலர் 17 ஆண்டுச் சந்தா ரூ. 8. (7—6—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 47

"ஆகா! அருமையான ஆரன்மூர் அரண்மனை; இதன் பெயரை 'தமிழகம்' என்று ஆக்கியிருப்பது சரி. இதைப்போலச் சென்னை இராஜ்யத்துக்கே 'தமிழகம்' என்று பெயரிடலாம். அதுதான், மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் காட்டும் காரியம். இதற்காக எதிர்க்கட்சிகள் யாவும் அறப்போர் நடாத்தினவாமே? விடாது குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றனராமே? ஏனய்யா காமராஜ், எமது சம்மதத்துக்காக் காத்திருந்தீர்? இதோ எம் சம்மதம்!!"

*

"பரபரப்புக் காட்டிடாத பக்தவத்சலமே! நீர் பரபரப்புக் காட்டுகிறீராமே, தென்மண்டல உணவுக் கவுன்சிலிலிருந்து சென்னையைவிலக்கவில்லையென்று. நீர் காட்டும் காரணம் சரி. சென்னையில் ஒரு விலையும் கேரளத்தில் இன்னொரு அதிக விலையும் விற்றால், இங்குள்ள அரிசி அங்குதான் போகும். ஆகவே, தனியாக இயங்கலாம். இதை டில்லி உணவு மந்திரி சபை, மறுத்தது தவறு. இதோ, எம் சம்மதம்!!"

*

"என்ன? இந்தியின் நுழைவைத் தமிழகம் எதிர்க்கிறதா! இதற்கு அடையாளமாக வானொலியினை 'ஆகாஷ்வாணி' என்று சொல்வதைக் கண்டிக்கிறதா! மக்களே கண்டிக்கும்போது, ஆளும் நமக்கென்ன நட்டம்? அன்புள்ள சுப்ரமணியனாரே, நீர் அடிக்கடி கட்டாய இந்தியைக் கண்டித்தும், தமிழ் மீது அன்புகாட்டியும் பேசிவருவதாகக் கேள்வியுற்றோம். உமக்குச் சகாயமாக இருக்கட்டும், உம்மைக் கண்டிக்கும் எதிர்க்கட்சிக்கு ஒரு கடிவாளமாக அமையட்டும். எங்கள் வருகைக்கு அறிகுறியாக, ஆகாஷ்வாணியை அகற்றிட, இதோ எம் சம்மதம்!!"

* * *

சம்மதம் தந்துவிட்டார்கள்! தமிழகத்தின் வனப்பூர், உதகைமலையுச்சிக்கு வந்து தங்கிய, நேரு அவர்களும், திருக்குமாரி இந்திராவும், தேபரும், மொரார்ஜியும் சம்மதம் தந்துவிட்டார்களாம்!!

எதற்குத் தெரியுமா? கடையடைப்புச் செய்ய! கருப்புக்கொடிகள் காட்ட! கண்டன ஊர்வலங்கள் நடாத்த! ஆட்சியையே கவிழ்க்க!!

ஆச்சரியமிகும், அதிருப்தியைத் தெரிவிக்க கருப்புக் கொடி பிடித்தால் அடித்தும் மிதித்தும் துவைத்தும் அட்டகாசம் செய்பவரா, சம்மதம் தந்தனரென்று? எத்தனையெத்தனையோ, கடையடைப்புகள் இதுவரை நடந்திருக்கின்றன! ஒன்றையும் இலட்சியம் செய்யாத உத்தமர்கள், இவர்கள்!! கலவரம் என்று பெயரிட்டு கண்டித்தது தவிர, கருணையெனும் சொல்லையும் உதிர்த்தது இல்லை. நடைபெற்ற அறப்போருக்கெல்லாம் பட்டம்சூட்டினரே தவிர, அதிருப்தியை மக்கள் மன்றம் தெரிவிக்கிறதென்று ஒரு நாளும் சொல்லியது இல்லை. நான்சென்ஸ் என்றார் நேரு! காட்டுமிராண்டித்தனம் என்றார் நேரு! —அப்படிப்பட்டவர் இந்த காரியங்களைச் செய்ய, சம்மதம் தந்திருக்கிறார்.

போங்கள்! போங்கள்!!
பொழுதை வீணாக்காதீர்கள்!
போராட்டம் செய்யுங்கள்!
விடாதீர்கள்! நடத்துங்கள்!
'கண்டனம்' நடக்கட்டும்!
நாடெங்கும் நடத்துங்கள்!!

என்று, சம்மதம் அளித்திருக்கிறார்கள், தங்களைச் சந்திக்கவந்த கேரளத்துக் காங்கிரசாருக்கு. நடக்கும் கம்யூனிஸ்டு ஆட்சிக்கு எதிராக, இதையெல்லாம் செய்திடச் சம்மதம் அளித்திருக்கிறார்கள்.

இவர்கள் சம்மதம் அளித்தால் போதும், தமிழைக் காப்பாற்றலாம் என்று தவிப்போருண்டு! இவர்கள் சம்மதம் கிடைத்தால், தென்னகத்தை, சிங்காரப் பூஞ்சோலையாக்கலாமே என்று காத்திருப்போர் ஏராளம்! இவர்கள் தரும் சம்மதத்திலே ஒட்டிக்கொண்டிருக்கிறது எமது எதிர்காலம் என்று வங்காளம், மராட்டியம், கூர்ஜரம், காஷ்மீரம், ஏங்கிக்கொண்டிருக்கிறது! இவர்தம் சம்மதத்தை எதிர்பார்த்து முதலாளிகள் கையிலே சிக்கித் தவித்திடும் தொழிலாளிகள் துயர பிம்பங்களாக நின்றுகொண்டிருக்கிறார்கள்!!—ஆனால்; இவர்கள் கம்யூனிஸ்டு ஆட்சியைக் கவிழ்க்கப் போராட்டம் நடாத்தச் சம்மதம் தந்திருக்கிறார்கள்!!

கேரளத்துக் காங்கிரசாரே!-எதிர்க்கட்சிகள் ஏதாவது, உங்களோடு சேருமானால், அவைகளையும் சேர்த்துக்கொண்டு, தீவிரமாகப் போராடுங்கள்!!—என, சம்மதம் தந்திருக்கிறார்கள்.

கேரளத்துக் கம்யூனிஸ்டுகள்!—தனியரசு கோரவில்லை, 'ததாஸ்து' போடாமலுமில்லை; எவ்வளவு விட்டுக் கொடுக்கவேண்டுமோ அந்தளவுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள்; முதலாளிகளின் கழுத்தையறுப்போர் என்றொரு பழியிருக்கிறதே, அதைத் துடைத்துக் கொள்வோம். பிர்லாவே வாருங்கள், வந்து போடுங்கள் உம் முதலீட்டை, என்று வரவேற்கிறார்கள். நீரென்ன? லெனினா, குருஷேவா?-என்று நினைக்கவில்லை, நேருவை. டில்லி செல்லும் போதெல்லாம், மற்ற மாநிலத்து முதலமைச்சர்களைப்போல, நம்பூதிரிபாட்டும், சகல 'தேவை'களையும் தரிசிக்கத் தவறுவதில்லை. டில்லி அழைத்தால், ஓடுகிறார்! டில்லி சொல்லும் யோசனைகளைக் காதுகொடுத்துக் கேட்கிறார்!! என்றாலும், அவரைக் கவிழ்க்க, 'சதி' உருவாகி, சம்மதமும் தரப்பட்டிருக்கிறது.

உலகம் தூற்றுமோ, காந்தியடிகளின் சீடர்களா இப்படி நடக்கிறார்கள் என்று காண்போர் ஏசுவரோ எனும் பயத்தாலேயே, கம்யூனிஸ்டு ஆட்சி, கேரளத்தில் நடக்க அனுமதித்தது, காங்கிரஸ். இப்போது கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, கவிழ்க்கப் புறப்படுகிறார்கள்!!

தன்னைச் சந்திக்கவந்த கேரளத்துக் காங்கிரசாருக்கு, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவி இந்திரா தேவி, இந்த 'சம்மதத்தை' அளித்தார் எனில், பொருளிருக்கிறது! ஆளும் நேருவும், அவருக்குப் போட்டியாரென உருவாகிவரும் நிதிக்காவலர் மொரார்ஜி தேசாயும் சம்மதம் அளித்திருக்கிறார்கள்!!

எதிர்க்கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு, எவர் கிடைத்தாலும் துணைபெற்றவண்ணம், கிளர்ச்சி செய்யச்சொல்லி, அளித்திருக்கிறார்கள் சம்மதம்.

எக்கட்சியானாலும் — அரசியல் விதிகளுக்குட்பட்டு—ஜனநாயக ரீதியில் இயங்குமானால் — ஆதரவளிப்போம்! ஆட்சி நடக்க உறுதுணை செய்வோம்! என்று, பந்துவும் நேருவும் பலமுறைசொல்லியதுண்டு. இப்போது, கட்சிக்கு வலிவுதேட, கம்யூனிஸ்டுகளைக் கவிழ்க்க, திட்டம் தீட்டுகிறது காங்கிரஸ்! தீரரே செல்வீர்; என்று உணர்ச்சியூட்டுகிறார் பாரதத் தலைவர்!!

எதிரிகளானாலும் கூடிவாழமுடியும், எதிரெதிர்க் கொள்கைகளானாலும் கூடிவாழ முடியும், இதுவே என் சித்தாந்தம் என்று உலகத்துக்கே பறைசாற்றுகிறவர், நேரு. ஆனால், இந்தியத் துணைக்கண்டத்துக்குள், தன்னுடைய கட்சியில்லாமல், இன்னொரு கட்சி நடாத்தும் அரசாங்கத்துடன் கூடி வாழ, ஒப்பவில்லை மனம். நீதி, பறக்கிறது! ஜனநாயக நியதி ஓட்டம் எடுக்கிறது! கட்சிப்பாசம் முன்வந்து நிற்கிறது! காங்கிரஸ் தலைவியாகத் தன் மகள் வந்ததும், கட்சியின் மூலம், அந்த அரசைக் கவிழ்க்கத் தட்டிவிடுகிறார் தந்திரகுதிரையை! சம்மதம் அளிக்கிறார், கிளர்ச்சிகள் நடக்க!!

குற்றமென்ன செய்தனர் கேரளத்து ஆட்சியினர்? —எனக் கேட்டால், மக்கள் மத்தியிலிருந்து, ஆவேசக் குரல் அதிகம் எழவில்லை! அப்படி நேராமல், தங்களைத் தற்காத்துக்கொள்ளும், திறமையும் முன் யோசனையும் உள்ளதாகவே கம்யூனிஸ்டுகள் நடந்து வருகிறார்கள்!! கண்ணை மூடிக்கொண்டு, சட்டங்களைப் போட்டு, கொள்கையின்படி நடப்போமெனப் பிடிவாதம் செய்துகொண்டு, எந்தக் காரியத்திலும் இறங்கவில்லை. இப்படியொரு ஆட்சி நமக்கு வாய்ப்பதே கடினம், கிடைத்த வாய்ப்பின் மூலம் மக்கள் மன்றத்தில் நீங்காத நல்ல பெயரைப் பெற்றுவிட வேண்டும் என்பதில் அதிக அக்கரை காட்டிவருகிறார், நம்பூதிரிபாட். அப்படி அக்கரை காட்டும்போது தனது மக்களுக்கு வேண்டிய பல நன்மைகளைச் செய்ய, டில்லியிடம் அதிகமான சலுகைகளைக் கேட்கிறார்! டில்லி செய்யும் ஓரவஞ்சனைகளை எடுத்துச் சொல்லாமலேயே, தட்டிக்கேட்கிறார்!! இது, பிடிக்கவில்லைப் போலும் டில்லிக்கு.

ஒளிவு மறைவாக இதுவரை, ஏதேதோ சொல்லி வந்தவர்கள், இப்போது வெளிப்படையாகவே சம்மதம் தந்திருக்கிறார்கள்.

"அப்பா சிநேகிதர்களா! இது உங்கள் இராஜ்யத்துப் பிரச்னை. நீங்கள் காங்கிரஸ்காரர்கள் என்பது சரி. கட்சியை வளர்க்க, உங்களுக்குப் பிடித்தமான காரியங்களை நீங்கள் செய்யுங்கள். அதற்கெனத் திட்டம் போட்டுக்கொண்டு நிறைவேற்றுவது உங்கள் பொறுப்பு. எங்களையெல்லாம் இழுக்காதீர்கள்'', என்று நேருவும் மொரார்ஜியும் சொல்லியிருந்தால், பெருந்தன்மையாயிருந்திருக்கும். அவர்கள் வந்து கேட்டதும், உடனே இவர்களும் ஆலோசனைகளிலிறங்கி, என்னென்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டு 'நடத்துங்கள்' என்று தட்டிக்கொடுத்து அனுப்பியிருக்கின்றனர்.

என்னென்ன குற்றச் சாட்டுகளின்பேரில், கேரளத்துக் காங்கிரஸை, கிளர்ச்சி செய்ய அனுமதித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போதுதான், வேடிக்கை அதிகமாகிறது நமக்கு.

ஆட்சியின் மூலம் தங்கள் கட்சிக்குச் செல்வாக்கு தேடுகிறார்கள்.

போலீசார் மூலமும், அதிகாரிகள் மூலமும், இதைச் செய்கிறார்கள்.

கம்யூனிஸ்டு சார்பில்லாதவைகளுக்கு ஆதரவு தர மறுக்கிறார்கள்.

(16-ம் பக்கம் பார்க்க)

சென்ற இதழ் தொடர்ச்சி...

கா. வேழவேந்தன்

கல்கத்தாவின் நடுப்பகுதியில் உள்ள 'காளிகாட்' ஆலயம் மிகவும் புகழ்வாய்ந்ததென்று கூறுகிறார்கள். நித்தம் நித்தம் எத்தனையோ நூற்றுக்கணக்கான பக்தர்கள் இக் கோயிலில் கூடுகிறார்களாம். கோயிலுள் நுழைந்ததும், காளியின்மீது அளவில்லாத பக்திகொண்ட வங்காளிகள், அக்கடவுளின் பெயரை உரக்கக் கூவிக்கொண்டே ஆரவார வழிபாடு நடத்துகிறார்கள். துணிந்து சொன்னால் சென்னை நகர இறைச்சிக் கடையை நினைவூட்டுவதுபோல் தூய்மையற்று விளங்குகிறது அன்னை காளியின் ஆலயம்! இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் ஆடுகளையும், கோழிகளையும் பல்வேறு உயிர்களையும் பலியிடும் கொடுமை மிக எளிதாக அங்கே நிகழ்கிறது. இரத்தத்தைச் சிலைமேல் தெளிப்பார்களாம். இந்தக் கோரக் காட்சியைக் கண்டபோது தமிழ்த்திரைப் படங்களில் வேடுவர் வழிபாடு நிகழ்த்தும் காட்சிகள். நெஞ்சத் திரையில் நிழலாடின! இங்கே உள்ள பூசாரிகளில் பலபேர் பெரும் பணம் தின்னிகளாக இருக்கிறார்கள்; வரும் பக்தர்களிடம் பல்வேறு முறைகளில் பணம் பறிப்பதே அவர்கள் தொழிலாக இருக்கிறது.

இப்போது ஆடுமாடுகளைப் பலிகொள்ளும் இதே சக்திவாய்ந்த காளி, சில ஆண்டுகளுக்கு முன்வரை மனிதர்களையே பலிவாங்கி வந்ததாக ஆதாரமான செய்தி கிடைத்தது. அந்தக் காலங்களில் பிற பகுதிகளிலிருந்து தவறிவரும் அயலவர்களை, இருட்டில் பிடித்து வந்து பலியிட்டுவிடுவார்களாம் பக்தசிரோன்மணிகள்!

இங்ஙனம் கோரவழிபாடு நிகழ்த்தும் கொடுமையாளர் ஒருபுறம் இருக்க, உயிர்வதையே கூடாது என்ற மகாவீரரின் சமயத்தைப் பின்பற்றுவோரைப்பற்றிக் கேள்வியுறும்போது, வியப்பால் திகைப்பே ஏற்படுகின்றது. இச்சமண சமய வழிபாடு நடத்துவோர் அமைத்துள்ள கோயில்கள் மிகமிகப் பொருட்செலவில் கட்டப்பட்டுள்ளன; அவை ஒவ்வொன்றும் கண்ணாடி மாளிகைகளாய், அரண்மனைகளைப் போன்று காணப்பெறுகின்றன. இக் கோயில்களைக் கட்டுவதற்கு அறம் வழங்குவோர், தம் சொத்து முழுவதையும் கொட்டிக் கொடுத்துவிடவேண்டுமாம்; அவர்கள் சொத்தில் மிச்சம்மீதி இருந்தால் அவற்றைக்கொண்டு, ஏதேனும் அணிமணிகள் வாங்கிக் கட்டி முடிக்கப்பட்ட கோயிலின் சுவரில் பதித்துவிடுகிறார்கள்! இவர்களின் கொள்கையை மூடநம்பிக்கை என்று சொல்லாமல் வேறு எப்படி அழைக்கமுடியும்?

இவ்வழிபாடு நிகழ்த்துவோரைப் பற்றி வேறு விந்தையான செய்திகளும் கிடைத்தன. இவர்களின் கோயில் வீதி வழியாக யாரேனும் காடை, கவுதாரி, புறா முதலியவற்றைப்பிடித்துச்சென்றால், இவர்கள் அவற்றை விட்டுவிடுமாறு வற்புறுத்துவார்களாம்; இங்ஙனம் பிடித்து வருபவர்கள் தமக்குக் கடைவீதியில் கிடைக்கும் விலையைவிட மிகுதி தருவதானால் பறவைகளை அவிழ்த்து விட்டுவிடுவர். அக்கோயிலின் வழியே பறவைகளைப் பிடித்துச் செல்லுவோர்க்கு யோகம் அடிப்பது எப்படியோ மற்ற வேட்டைக் காரர்களுக்கும் தெரிந்துவிட்டது. சில நாட்களில் ஊரிலிருந்த மைனா, சிட்டு முதலிய அத்தனை பறவைகளும் பிடிக்கப்பட்டு, கூண்டில் அடைக்கப்பட்டு அங்குகொண்டுவரப்பட்டன; சுருங்கச் சொன்னால் கோயிலுக்கு முன் ஒரு 'பறவைக் கடைவீதி'யே அமைந்துவிட்டது; அதனால் புதிய சிக்கல் உருவாகியது! எத்தனை பக்தர்கள் எத்தனை பறவைகளை விலைக்கு வாங்கி அவற்றைக் காப்பாற்ற முடியும்? இறுதியில் இந்தப் பிரச்சினை மேலிடத்தின் கண்ணோட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு,பின்னர்பறவைகளை கோயிலுக்குமுன்கொண்டுசெல்லப் படக் கூடாது என்ற விதிமுறை ஏற்பட்டது என்று சொன்னார்கள்!

இச் செய்தியே நமக்குச் சிரிப்பை வரவழைக்கிறது! இதைவிட வேடிக்கையான விழாவைப்பற்றியும் கேள்விப்பட்டோம். இன்னும் கூட ஆண்டுக்கு ஒருமுறை இவ்விழா நடைபெறுகிறதாம். 'உயிருக்குத் தீமை செய்யாமல், அவை வசதியுடன் வாழ உதவி செய்ய வேண்டும்' என்ற உயர்ந்த குறிக்கோளுடன் இவ்விழா நடத்தப்படுகிறது; இந்நாளில் ஒரு தனி இருட்டறையில் பெரிய கட்டில் ஒன்று அமைத்திருப்பார்கள்; அதில் கணக்கிலடங்காத அளவு மூட்டைப் பூச்சிகள் தேங்கி வழியும். அம்மூட்டைப் பூச்சிகளுக்கு உதவி புரிய இவ்விழா நடத்தப்படுகிறதாம்! வலிவும் குருதியோட்டமும் நிறைந்த ஒரு மனிதனை அழைத்து வருவார்கள்; அவனுக்கு இருபது ரூபாயோ அன்றி முப்பது ரூபாயோ அளிக்கப்படும்; பிறகு அவனுடைய ஆடைகளையெல்லாம்

களைந்து, அவனை மூட்டைப் பூச்சிகளே நிறைந்த அந்த அறையில் கட்டிலோடு கட்டிலாகச் சேர்த்துப் பிணைப்பார்கள்; இரவு முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய இரத்தத்தை எண்ணிலடங்காத அந்த மூட்டைப்பூச்சிகள் பகிர்ந்து கொள்ளும்! இந்த விழாவை 'இரத்த தானம் வழங்கும் விழா' என்று அந்தப் பக்தி இரத்தினங்கள் அழைக்கின்றனர்; நாங்கள் மூட்டைப் பூச்சிக்கும் இரத்தப் பலி கொடுக்கும் விழா நிகழ்கின்றதே என்று எண்ணினோம்! காளி வழிபாடு செய்வோர் கடவுளுக்கு மனிதனை வெட்டி இரத்தம் வழங்கினார்களாம்; இவர்களோ அவனை மெல்ல மெல்லச் சாகடித்து இரத்தப்பலி செய்கிறார்கள் என்று வேடிக்கையாகச் சொன்னேன்!

தட்சிணேஸ்வரம் என்ற பகுதியில் இராமகிருஷ்ண பரம ஹம்சரின் மடமும் கோயிலும், அவர் விட்டுச்சென்ற பொருள்களும் உள்ளன; தூய உள்ளத்தின் தத்துவத்தைப் போதித்த அவரை வழிபடுவதற்கு, மிகமிக அழுக்கடைந்த ஹூக்ளியாற்று நீரில் மூழ்கி எழுந்து, மக்களெல்லாம் கோயிலுக்குச் செல்கிறார்கள்; அந்த நீரில் ஒருமுறை குளித்துவிட்டால் உடனே நல்ல நீரில் வந்து குளித்தாக வேண்டும்! அவ்வளவு 'தூய்மை நிறைந்த' நீரில் குளித்துத்தான் பக்தர்கள் தம் உடலைப் புனிதப்படுத்திக் கொள்கிறார்கள்! இக்கோயில்களின் உள்ளே சென்றால், மலருக்குப் பதிலாக, காசுகளும் தூவப்படுவதைக் காணலாம்! இதுபோன்று பல்வேறு வியப்புக்குரிய காட்சிகளை வங்கத்து மக்களின் வழிபாட்டு நெறியில் காணமுடிகிறது.

வங்கத்தில் சாதிப்பாகுபாடுகள் குலத்தையும் மரபையும் ஒட்டி வழிவழியாக வருகின்றன; சட்டர்ஜி, முக்கர்ஜி, பானர்ஜி போன்ற பிரிவுகள் பார்ப்பனருக்குரியவை; போஸ், ததே, சென் போன்ற பிரிவுகள் பார்ப்பனரல்லாதாரிடையே உள்ளவை. வங்கத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் ஆகியோரிடையே இருந்த வேற்றுமை ஒரு காலத்தில் மிகுந்திருந்ததாம்; இந்து முஸ்லீம் கலகம் ஏற்பட்ட பிறகு இவர்கள் ஓரளவு ஒற்றுமையுடன் இருக்கிறார்கள்; சாதிப்பாகுபாடு இருந்தாலும் ஒருவருக்கு மற்றவர் உயர்ந்தவர் என்ற உயர்வு மனப்பான்மை தென்படவில்லை. இதைவிட மற்றொரு விந்தையான செய்தியும் வங்காளிகளிடையே உள்ளதை அறிந்தோம்.

நம் நாட்டில் செட்டியார் வீட்டுப் பிள்ளை, எந்த ஊருக்குச் சென்று மணம் புரிந்தாலும், வேறொரு செட்டியார் வீட்டுப் பெண்ணைத்தான் மணக்கவேண்டும் என்ற அவலக்கேடு இருக்கிறது. ஆனால் வங்கத்தில் முக்கர்ஜியின் வீட்டார் ஒரு முக்கர்ஜியின் வீட்டிலேயே பெண் எடுக்கமாட்டார்கள்; சட்டர்ஜியின் வீட்டிலோ பானர்ஜியின் வீட்டிலோதான் பெண் எடுப்பார்கள். இப்படி நிகழும் மாற்றுமுறை மண ஒப்பந்தம்தான் வங்கத்தில் அனைவரிடமும் காணப்படுகின்றது. திருமணத்திற்கு வரதட்சணையின் பெயராலும், வேறு முறையிலும் பெண் வீட்டார் மணமகனுக்கு மிகுந்த பணம் கொடுக்க வேண்டியுள்ளது. இக்கொடுமைகளைக் கருப்பொருளாக வைத்துத்தான், வங்கத்தின் பெருங்கதைகளும் சிறுகதைகளும் பல எழுதப்பட்டிருக்கின்றன! வங்கத்துப் பெண்கள் அழகு நிறைந்தவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் அடக்கத்தையும் ஒடுக்கத்தையும் அவர்களிடம் எதிர்பார்க்க முடியவில்லை; இது இயற்கைதானே!

வங்கத்தில் ஒவ்வொரு பகுதியும் தொழில் துறையிலும் பொருளியல் துறையிலும், வாழ்வியல் துறையிலும் தென்னாட்டைக் காட்டிலும் முன்னேறி இருப்பதை ஒவ்வொரு அங்குலத்திலும் காணமுடிகிறது. அரசாங்கமும் தனி முதலாளிகளும் மிக்க முயற்சியுடன் பெரும்தொழில் திட்டங்களை அமைத்திருக்கிறார்கள். இதனால்தான் நாளுக்குநாள் வெளி மாநிலங்களிலிருந்தும மக்கள் வந்து கூடியவண்ணம் உள்ளனர்.

வங்கத்தில் புகழ்பெற்ற துர்காபூர் இரும்புத் தொழிற்சாலை தொலைவிலிருந்து பார்ப்பதற்கே மலைப்புத் தருகின்றது. ஒவ்வொரு நாளும் மக்கள் கூட்டம் இத்தொழில்புரியில் குழுமி வருகிறது. எங்கு நோக்கினும் பளு உயர்த்திகளும் பொறிகளும் நின்று ஆரவாரம் செய்கின்றன. ரூபாய் 173 கோடிக்கு மேல் செலவிடப்பட்டு நிறைவேற்றப்படும் இத்தொழிற்சாலையால், எதிர்கால வங்கம் மேலும் பொருளியலில் முன்னேறப் போகிறது. மற்றும் 'நிக்கோ எலக்ட்ரிக் வொர்க்ஸ்' போன்று பல்வேறு தொழிற்சாலைகள் நிரம்பி வழியும் வங்கத்தின் வாழ்க்கைத் தரம் தினம்தினம் உயர்ந்து கொண்டே வருகின்றது.

கல்கத்தாவில் நாளிதழ், வார இதழ், திங்கள் இதழ் ஆகியவை பெருமளவுக்கு வெளியிடப்படுகின்றன. 'ஸ்டேட்ஸ் மென்' என்ற ஆங்கில நாளிதழ்தான் மிகுதியாக விற்பனையாகின்றது. நம்நாட்டில் இருக்கும் நாளிதழ்களைப் போன்று இவ்விதழ் அரசாங்கத்திற்கு எதிரான செய்திகளை இருட்டடிப்புச் செய்வதில்லை. குறிப்பாக 'ஸ்டேட்ஸ் மென்' இதழ் திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிய முக்கிய செய்திகளை அவ்வப்பொழுது உடனடியாக வங்க மக்களுக்குத் தருகிறது என்று அனைவரும் சொல்கிறார்கள். அண்மையில் நடந்த சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை அவ்வப்பொழுது எடுத்துக்கூறி, தி. மு. கழகம்முன்னணியில்நிற்கும் செய்தியையும் விரிவாக வெளியிட்டதாம்;

(8-ம் பக்கம் பார்க்க)

நாடக விருந்து!

தில்லை வில்லாளன்,
எம். ஏ., பி. எல்.

தரும்

திரை

படிக்க, நடிக்க
ஏற்ற வகையில்
இனிக்கும் முறையில்
எழுதப்பட்டுள்ளது.

விலை ரூ. 1.

விவரங்களுக்கு:-

பாரி நிலையம்
59, பிராட்வே
சென்னை 1.

வாழ்வதா? சாவதா?

அன்புள்ள முல்லைக்கு!

உன் இரு கடிதங்களும் கிடைக்கப் பெற்றேன். இரண்டாவது கடிதத்தில், எனக்குக் கடிதம் எழுத ஐந்து புதுக்காசுகள் கிடைக்கவில்லையா என எழுதியிருந்தாய். ஆரம்பப் பள்ளியில் படித்திருக்கின்றேன் "தோழனோடும் ஏழ்மை பேசேல்'' என்று. அத்துடன் அந்த உயர்ந்த கருத்தைப் பலருக்கு எடுத்துச் சொல்லும் ஆசிரியையாக இன்று இருக்கின்றேன். நீ என் உயிர்த் தோழி. உன்னிடம் சொல்வதில் குறை ஒன்றுமில்லை. உண்மையாகச் சொல்லுகின்றேன், சில சமயங்களில் ஒரு கடிதம் எழுதக்கூட என்னிடம் காசு கிடைப்பதில்லை.

சில சமயம் என் தாயிடம் செலவுக்குக் காசு கேட்பதுண்டு. கையில் இருந்தால் கிடைக்கும். இன்றேல், உன்னைப் படிக்க வைக்கச் செலவு செய்த பணம் இருந்தால் இன்று இரண்டு எருமை மாடுகளாவது வாங்கிவைத்துக்கொண்டு நிம்மதியாகக் காலம் தள்ளலாம். உன்னைப் படிக்க வைத்து என்ன சுகத்தைக் கண்டோம்? உன்னை ஒத்த வயதுள்ள பெண்கள் குடியும், குடித்தனமுமாக இருக்கிறார்கள். நீயோ என்னிடம் செலவுக்குக் காசு கேட்கிறாய். இப்படி ஒரு சிறு சொற்பொழிவு நடக்கும்.

முல்லை! பள்ளியில் படிக்கும் போதுதான் செலவுக்குக் கஷ்டப்பட்டேன். இன்று படித்துவிட்டு வேலை கிடைக்காமல் கஷ்டப்படுகின்றேன். இந்த நாட்டில் பிறந்ததற்காகக் கடைசிவரை கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டுமா?

நான் ஆசிரியைப் பயிற்சிக்குச் செல்லு முன்னும், சென்று வந்த பின்னும், நீயும் மற்றத் தோழியர்களும் என்னைப் பாராட்டி, ஆசிரியைத் தொழிலின் உயர்வைப் பற்றியும், என் போன்றவர்களால் தான் இந்த நாட்டிலே நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்றும் கூறினீர்கள். அனைத்தும் உண்மையே! எனக்கு ஆசிரியைத் தொழில்மீது வெறுப்பில்லை. பயிற்சியை முடித்து ஓர் ஆண்டாகியும் இன்னும் வேலை கிடைக்கவில்லையே என்று நினைக்கும்போது தான் ஏன் ஆசிரியை வேலைக்கு வந்தோம். கிராம சேவகி, நர்ஸ் வேலைக்காவது சென்றிருக்கக் கூடாதா என எண்ணுவதுண்டு.

1958 மார்ச்சில் ஆசிரியர் தேர்வு எழுதினேன். தேர்வின் முடிவு ஜூன் மாதம் அறிவிக்கப்பட்டது. தேர்விலும் வெற்றி அடைந்தேன். பின் வேலை தேடித்தரும் அலுவலகத்திலும், நாட்டாண்மைக் கழகத்திலும் வேலை கொடுக்கும்படி மனுச்செய்து பெயரையும் பதிவு

மக்கள் செல்வன்

செய்துள்ளேன். மாதம் பத்துக்கு மேலாகியும் இன்னும் வேலை கிடைத்தபாடில்லை. கடந்த பத்து மாத காலமாக, எப்படி வாழ்வது? ஆசிரியை வேலைக்குப் படிக்க வருபவர்கள் பட்டா, மிராசுதார் வீட்டுச் செல்வக்குமரிகளா வருகின்றார்கள்?

இந்த நாட்டிலே படித்துவிட்டு வேலை கிடைக்காமல் அல்லலுறும் ஏழை ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்கும்வரை உதவித் தொகையா அளிக்கின்றனர்? பயிற்சிக் காலத்தில் கொடுக்கும் உதவித் தொகையே போதாமல் கடன்வாங்கிப் படித்துவிட்டு வரவேண்டியுள்ளது. பயிற்சி முடிந்து ஓராண்டுக்கு மேலாகின்றது. கடன் வாங்கியவர்களுக்கு, வாங்கிய கடனை இன்னும் கொடுத்தபாடில்லை. இந்நிலையில் இனி, யாரிடம் கடன் வாங்குவது? எப்படி வாழ்வது?

ஆசிரியர்கள் வசதியுள்ளவர்களா? படித்துவிட்டு வேலைகிடைக்காமல் கண்ணீரும், கம்பலையுமாகக் கால்வயிறு, அரைவயிறுமாக எத்தனை நாளைக்கு வாழ்வது? இந்த நிலைமையை எண்ணும்போது வாழ்வதா சாவதா? எனப் புரியாமல் நாளைக் கழித்துவரும் அவலநிலை ஆசிரிய சமுதாயத்துக்கு இன்று ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு என்றுதான் மறுமலர்ச்சி ஏற்படுமோ?

அமைச்சர்கள் பொதுக்கூட்டங்களில் பேசும்போது ஆசிரியர் பணி உயர்ந்தது! ஒப்பற்றது! இந்த உன்னதமான பணியை ஆற்றப் பெண்கள் முன்வருவதில்லை என்கின்றனர். ஆசிரியைவேலைக்கு வருபவர்கள் பெரும்பாலும் வாழ்க்கையின் அடித்தளத்தில் உள்ளவர்கள்தான் வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோருக்கு பயிற்சிப் பள்ளியில் சேர்வதற்கே இடம் கிடைப்பதில்லை. கிடைத்தும் பயிற்சியை முடித்து வெளிவந்தாலோ வேலைக்காக ஆண்டுக் கணக்கில் காத்துக்கொண்டு இருக்கவேண்டியுள்ளது. இந்நிலையில் எப்படி ஆசிரியை வேலைக்கு வருவார்கள்?

58-ம் ஆண்டு தேர்ச்சி பெற்ற ஆயிரம் ஆயிரம் ஆசிரியர்களுக்கே இன்னும் வேலைகிடைக்கவில்லை. இந்நிலையில் 59-ம் ஆண்டுத் தேர்வு எழுதியவர்களுக்கு எப்பொழுது வேலை கிடைக்கும்? அமைச்சர்களைக் கேட்டால் எப்படியும் மூன்றுவது

ஐந்தாண்டுத்திட்டம் முடிவதற்குள் கிடைத்துவிடும். அவசரப்படாதீர்கள்! அமைதியாக இருங்கள் என ஆறுதல் கூறுவார்கள். வேலை கிடைக்கும்வரை ஏழை ஆசிரியர்கள் என்னசெய்வது? எப்படி வாழ்வது? அவர்கள் வாழ்வதா? சாவதா?

படித்துவிட்டு வேலை இன்றி இருப்பதால் பலர் பலவாறு பேசுகின்றனர். என்னைக் காணும்போது சில பெண்கள் பேசுகின்றனர், ஏன் இன்னும் திலகத்திற்கு வேலைவரவில்லை? உனக்கு தெரியாதா? அவள்தான் பரீட்சையிலே தேறவில்லையே! நம்மிடம் எல்லாம் தேறிவிட்டதாகப் பெருமை அடித்துக்கொண்டாள் என்பார்கள். இதை கேட்கும்போது உண்மைக்குத்திரையிட்டு மறைக்கின்றார்களே என உள்ளம் வேதனைப்படும். அவர்களைச் சொல்லி யாது பயன்? அதற்கெல்லாம் காரணம் ஆட்சியாளர்கள்தானே!

நீ நினைக்கலாம், முன்பெல்லாம் மிக 'மலிவுப்பதிப்பு' ஆசிரியர் வேலைதானே! அதற்குக்கூடவா டிமாண்டு வந்தது என்று. ஆசிரியர் சமுகத்திலே வேலை இல்லாத் திண்டாட்டம் ஏன் உண்டாயிற்று? என்பதைப் பற்றிய முழு விபரங்களை என்முன்னர்கடிதங்களில் உனக்குத் தெரியப்படுத்தியுள்ளேன். இருப்பினும் சிலவற்றை மீண்டும் உனக்கு நினைவு படுத்துகின்றேன்.

நமது குடியரசுச்சட்டத்தில் பத்து ஆண்டிற்குள் எல்லாப் பிள்ளைகளையும் எழுத்தறிவு பெற்றவர்களாக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. நாமும் குடியரசு பெற்றுப் பத்தாண்டு பூர்த்தியாகப் போகின்றது இன்னும் 50% சதவித பிள்ளைகள்கூட எழுத்தறிவு பெறவில்லை. இந்த முறையைப் போக்க நாடு முழுதும் கட்டாயக் கல்வி முறையை அமுலுக்குக் கொண்டுவந்து—பட்டி தொட்டி எங்கும் உள்ள பள்ளிகளை அதிகப்படுத்தி—அதிக ஆசிரியர்களை நியமித்து எல்லோருக்கும் கல்வி அறிவு புகட்டவேண்டும்; அதுதான்முறை. செய்யவேண்டிய கடமையுங்கூட.

இந்தக் குறையைப்போக்க நமது மதிப்புக்குரிய கல்வி அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? ஒரு கல்லால் பல மாங்காய்கள் அடித்துள்ளார். இப்பொழுதுள்ள ஆசிரியர்களைக்கொண்டும் — இப்பொழுதுள்ள கட்டிட வசதிகளைக் கொண்டும்—இப்பொழுதுள்ள நிதி வசதியைக் கொண்டும் — இப்பொழுது படிக்கும் பிள்ளைகளைவிட இன்னொரு பங்கு பிள்ளைகள் படிக்கவேண்டும். அதற்கு என்ன வழி என்றால், மாணவர்கள் வருகையை அதிகப்படுத்தவேண்டும் என்று, 1:20 என்று முன்பு இருந்ததை 1:35 ஆக உயர்த்தியுள்ளார். இதுதான் ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்காததற்கு அடிப்படைக் காரணம்.

ஒரு வகுப்பிற்கு இரண்டாவது ஆசிரியர் போடவேண்டுமென்றாலோ—ஒரு ஆசிரியர் வேலையை விட்டு விலகினாலோ — ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலோ—அல்லது இறந்துவிட்டாலோ, அந்தக் காலி இடத்துக்கு புது ஆசிரியர் போடவேண்டுமென்றால் அந்த வகுப்பிலும், மற்ற வகுப்புகளிலும் 35 பிள்ளைகளுக்குக் குறையாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் புது ஆசிரியர் போடமுடியும். இதனாலும் வேலை கிடைக்கவில்லை ஆசிரிய சமுகத்திற்கு.

காலுக்குச்செருப்புத்தேவைதான். செருப்புக்காகயாருங்காலைக்குறைத்துக்கொள்ளமாட்டார்கள். அதைப் போல நாட்டு மக்கள் அனைவருக்கும் கல்வி தேவைதான். அதற்காக மாணவர்களின் வருகையை அதிகப்படுத்தி ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்காமல் செய்வதும், செருப்புக்காக காலைக் குறைத்துக் கொள்ளும் செயலும் ஒன்றுதான்.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று நீதிவாக்கியத்தில் உள்ளபடியே நமது கல்வி அமைச்சருக்கு நம்பிக்கை இருக்குமானால், ஏழை ஆசிரியர்கள் வேலை இன்றித் துன்புறுவதைக் காண உள்ளம் சகியார் என்பது உண்மையானால், இப்பொழுதுள்ள மாணவர்கள் விகிதத்தை மாற்றி முன்போல் 1 : 20 ஆக ஆக்கி அல்லலுறும் ஆசிரியர்களுக்கு அபயம் அளிக்க முன் வரவேண்டும். செய்வாரா? இந்த நல்ல காரியத்தில் நாட்டம் செல்லுமா?

அன்புள்ள,

திலகவதி.

6-ம் பக்கத் தொடர்ச்சி

நம் கழகம் பெருவாரியான வாக்குகள் பெற்ற தனிக் கட்சியாக அறிவிக்கப்பட்டதை பெருந் தலைப்பிட்டு முதற் பக்கத்தில் வெளியிட்டதாம் இந்த ஆங்கில இதழ்! இதேபோல் முன்பு நம் கல்வியமைச்சர் சி. சுப்ரமணியத்தையும் நம் கழகத்தையும் இணைத்து எழுதிய 'அமிர்தபசார் பத்திரிகா'வும் நம் கழகச் செய்திகளை வெளியிடுகின்றது; மற்றும் 'ஜுகாந்தர்' முதலிய வங்க இதழ்களும் உள்ளன.

பிறப்பால் உயர்வு மனப்பான்மை காட்டும் வங்காளிகள் ஏனைய மாநில மக்களைத் தாழ்வாக மதிப்பதாக, மற்றையோர் குற்றம் சாட்டுகின்றார்கள்; வங்காளிகள் மிளகாயையும் புளியையும் மிகுதியாக உணவில் சேர்க்கமாட்டார்கள்; எனவே அவர்கள் தமிழர்களைக் கேலிக்குரலில் 'தேதூ லோக்' (புளி தின்னிகள்) என்று அழைக்கிறார்கள்; இருந்தாலும் பஞ்சாபியையும், பீகாரியையும் மதிப்பதைக் காட்டிலும் ஒழுக்கமும் கடமையுணர்வும் நிறைந்த தமிழரை ஓரளவு மதிக்கவே செய்கிறார்கள்! அதனால்தான் அரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் வங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்க முடிகிறது.

எது எப்படி இருந்தாலும் நாம் இங்கே வரும் வடநாட்டவருக்கு அளிக்கும் மதிப்பும் வசதியும், அங்கே உள்ள தமிழனுக்கோ, மலையாளிக்கோ பத்தில் ஒரு பங்கும் அளிக்கப்படுவதில்லை. இதே போல்தான் உத்தரப்பிரதேசத்தில் சாரநாத், காசி முதலிய இடங்களுக்குச் சென்றபோதும், 'மதராசி'களை வடநாட்டவர் மட்டமாகக் கருதுவதைக் காண முடிந்தது. இத்தகைய அவலக் காட்சிகளைப் பார்க்கும்போது, நம் தலைநகரத்தில் சௌகார்பேட்டை என்று ஒரு வசதியான பகுதியை அமைத்துக் கொடுத்து, வடக்கிலிருந்து வந்தவரையெல்லாம் கொலுவீற்றிருக்கச் செய்யும் நம்மவரின் பரந்த தேசிய உணர்ச்சி புலப்பட்டது! பயணத்தை முடித்துக்கொண்டு சென்னைப் புகைவண்டியில் ஏறியதும், 'நமக்கென்று தனியரசு அமைந்தாலொழிய நம்மவர் வாழ வழியில்லை' என்ற சொற்கள் எங்களையறியாமலே எங்கள் வாயினின்றும் வெளியேறின!

சாவுக்குக் காரணம்?

3

திருமாம்பாள் கல்லூரியில் படிக்கும் கனகத்திற்குத் தன் கல்லூரிப் பாடங்களில் வரும் ஐயங்களுக்கு கமலக்கண்ணனை நாடுமாறு பாண்டியன் கூறியிருந்தான். ஒருமுறை தான் சென்னைக்கு வந்தபோது, தனது அக்காள் நிலாம்பிகை வீட்டிற்குப் பக்கத்துத் தெருவில் குடியிருக்கும் கமலக் கண்ணனைக் கனகத்திற்கு அறிமுகம் செய்துவைத்தான்.

கனகம் தன் பாடங்களில் வரும் ஐயங்களுக்கும், தான் விஞ்ஞானத் துறையில் ஈடுபட்டுச்செய்யும் திறன் ஆய்வுக்கும் கமலக்கண்ணனை அடிக்கடி காண்பதுண்டு. அடக்கம், அன்பு, ஈகை, கருணை உள்ளம் இத்தனையும் ஒருங்கே அமையப் பெற்ற கமலக்கண்ணன் அறிவாராய்ச்சியிலும் மேம்பட்டு விளங்கினான். கமலக்கண்ணன் படிக்கும கல்லூரி ஆசிரியர்கள் சிலர், மாலை வேளைகளில் கமலக்கண்ணனிடம் வந்து ஆய்வுரை நடத்துவர். இத்தனைக்கும் மேலாக அவனிடத்தில் ஆண்மைச் சக்தி அமைந்திருந்தது. நல்ல உயரமும் அழகான உடற்கட்டும் கொண்டவனாய் அழகாகக் காட்சி அளித்தான்.

கமலக்கண்ணன் முதல் வகுப்பிலேயே கல்லூரிப் பேச்சுப் போட்டி, எழுத்துப்போட்டி ஆகியவைகளில் அரசியலார் பரிசு பெற்றவன். இத்தனைபேறுகளும் உடைய கமலக்கண்ணனிடம் மிக அடக்கமாகப் பழகிவந்தாள் கனகம். ஆண்டுக் கணக்கில் பழகிய பழக்கத்தால், இரண்டு அறிவுள்ளங்களும் ஒன்றையொன்று நட்புக்கொள்ள விரும்பின. ஒரு உள்ளம் மற்றொரு உள்ளத்தை வென்றது. இருவர் கருத்தும் ஒன்றிவிட்டது. பின்னர் இவர்களிடையே காதல் அரும்பிற்று.

கமலக்கண்ணனுக்கும் கனகத்திற்கும் ஏற்பட்ட காதல் நெறி, கண்டதும் காதல், பின்னர் சாதல் என்ற முறையில் அமையாது, அந்நெறி பலநாள் அரும்பி, பல நாள் போதாகிப் பின்னர் பண்புவழிபட்டு மலர்ந்தது. இவர்கள் இருவரும் அறிவுச் செல்வத்தோடு புலனடக்கம் பெற்றவர்கள். வள்ளுவரின் வாய்மையை வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் போற்றி வளர்ப்பவர்கள்.

கனகத்திற்கு கமலக்கண்ணனிடம் உள்ள காதல் மகத்தானது. அது பழந்தமிழ்நாட்டு வாழ்வாக அமைந்திருந்தது. ‘ஓராவிற்கு இருகோடு பத்தாவென்ன’ என்றவாறு அவர்களுடைய காதல் ஒழுக்கம் சிறந்து நின்றது. இவ்வொழுக்கம் கற்பொழுக்கமாகத் திகழ, இருவருமே முயன்றிருந்தனர்.

•

கனகத்திற்கும் கமலக்கண்ணனுக்கும் உள்ள நட்பின் தொடர்பைப் பாண்டியன் நன்கு அறிவான். பாண்டியனுக்கே தனது தங்கையைக் கமலக்கண்ணனுக்குப் மணம் முடித்துவைக்க

சிறுவை அனுசுயா—மோகனசுந்தரம்

வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆதலால் பாண்டியன், கனகம் கமலக்கண்ணன்பால் செலுத்தும் அன்புக்குக் குறுக்கே நிற்கவில்லை. ஆதலால் பாண்டியன் சென்னையில் இருக்கும் கமலக் கண்ணனுக்குக் கீழ்க்கண்டவாறு ஒரு கடிதம் எழுதி இருந்தான்.

காட்டூர், 18-5-42.

அன்புள்ள நண்பனுக்கு,

நலம். உனது எம். ஏ. தேர்வுச் செய்தி கேட்டு மிக்க மகிழ்ந்தேன். சில அவசர அலுவல்களை முன்னிட்டு நான் சென்னைக்கு வர இயலவில்லை. இங்கு இலட்சுமி அம்மன் கோயில் நெருப்புத் திருவிழா. எனது செல்வத் தங்கை கனகத்திற்கு இவ்விழாக்கள் பிடிக்காது. அவள் விஞ்ஞான மாணவி மட்டுமல்ல, அறிவியக்கப் பெரும்படையின் காவற்பெண்டு. ஆகவே நான் இத் திருவிழாவிற்கு அழைக்கவில்லை. மேலும் கனகத்தின் திருமணம் சம்பந்தமாக உன்னிடம் பேசி ஒரு முடிவு காணவேண்டும்.

உன்னுடைய தந்தை உடையார் வகுப்பைச் சேர்ந்தவராம். மேலும் நான் வேளாளனாய் இருந்தும்கூட கலப்பு மணம் செய்துகொண்டவனும். ஆகவே இந்தச் சம்பந்தம் கூடாது என்று ஒரு தக்க நண்பர் மூலம் எனக்குத் தெரிவித்துவிட்டார்.

ஆகவே ஆருயிர்த் தோழனாகிய உன்னிடம் ஏற்கெனவே உனது உள்ளத்தைக் கவர்ந்த எனது தங்கை கனகத்தின் எதிர் காலத்தைப்பற்றிச் சிந்தித்து முடிவு கட்டவே உன்னை அழைக்கிறேன். ஆகவே உடனே புறப்பட்டு வரவும். மாலை வண்டிக்கு யான் வண்டி கட்டிக்கொண்டு இரயில் நிலையத்திற்கு வருகிறேன்.

இப்படிக்கு,
அருமைத் தோழன்,
பாண்டியன்.

இக்கடிதத்தைக் கண்டதும் கமலக்கண்ணன் மனம் கலங்கினான். தன் நெஞ்சின் ஆழத்தில் யாரோ சம்மட்டி கொண்டு தாக்குவதுபோல் இருந்தது. கடிதத்தைப் படித்த சிறிது நேரத்திற்கெல்லாம் மயக்கமானான். நீண்ட நேரத்திற்குப் பிறகு எழுந்து உட்கார்ந்து தனது தந்தையின் சாதி வெறியைப் பற்றி நினைத்தான். சென்ற சிலவார காலமாகச் சிறு ஊடல் காரணமாகக் கனகமும் வருவதில்லை. ஆகவே தனது மனக் கொதிப்பை எப்படியும் பிறரிடம் சொல்லித் தணித்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தான். ஆயினும் அன்று நண்பர்கள்கூட யாரும் வரவில்லை. ஆகவே கமலக் கண்ணன் நேரே தனது தெருக் கோடியில் இருக்கும் “பேராசிரியர் நமச்சிவாயர் படிப்பகத்தில்” போய் நற்றிணை எனும் நூலினை எடுத்துப் படிக்க உட்கார்ந்துவிட்டான். பின்னர் படிப்பகம் மூடும் வரையில்

தன் மனத்தை நற்றிணையிலேயே ஆழப் பதித்துவிட்டான். நற்றிணையில் பல கனகங்களைக் கண்டான். அதில் வரும் ஒவ்வொரு தமிழ் மகளுடைய நிலையும் பண்பாட்டின் உச்சியில் இருந்து அவர்களுடைய மனப்பண்பை விளக்கிக் காட்டியது. ஆகவே கவலையை மறந்து படிப்பகம் மூடும் வரையில் மன ஒருமைப்பாட்டில் திளைத்து நின்ற கமலக்கண்ணனை அப்படி ஒன்றும் சிறப்பித்துப் போற்றுவதற்கு இல்லை. அந்த நற்றிணையின் இயல்பே அப்படி.

படிப்பகத்தைவிட்டுத் தனது அறைக்கு இரவு 9-30 மணிக்கு வந்தான். மனமுடைந்து நீண்டநேரம் தமிழ் அமுதம் பருகிய காரணத்தால் அறிவுப் பசி தணிந்து நின்றபோது இயற்கைப்பசி அரும்பவில்லை. ஆகவே தனது காதற்கிழத்தி கனகத்திற்கு ஒரு கடிதமும், தனது தந்தைக்கு ஒரு கடிதமும் எழுதி முடித்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றான். கனகத்திற்கு எழுதிய கடிதம்தான், மீஞ்சூர் நெருப்புத் திருவிழாவிற்குக் கமலக்கண்ணனைச் சந்திக்கப்போகிறோம் என்ற எக்களிப்பில் கனகம் பொன்னேரி லோக்களில் போகும்போது படித்த கடிதம். மற்றொன்று, தன் தந்தை சாதிவெறிகொண்டு அலைவதைக் கண்டித்து—தமிழ்நாட்டில் பலகாலமாகச் சேமித்து வைத்திருக்கும் தமிழ்க் காவல் பெட்டகங்களிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக்காட்டி எழுதிய கடிதம். அதனுடைய முழுவிவரம் நமக்குக் கிடைக்கவில்லை. மறுநாள் படுக்கையில் இருந்து எழுந்த கமலக்கண்ணன் தனது முதல் வேலையாக இரவு எழுதிய இரு கடிதங்களையும் அஞ்சல் நிலையத்தில் சேர்த்துப் பின்னர்தான் சிற்றுண்டிக்குச் சென்றான்.

* * *

தன் மகன் கமலக்கண்ணன் எழுதிய கடிதத்தைக் கண்ட அரசூர் முனுசாமி உடையார் மகனது முடிவைக் கண்டு சினந்தார். எப்படியும் தன் மகன் கனகத்தை மணம் செய்துகொள்வது உறுதி என்பது அவன் எழுதிய கடிதத்தின் மூலம் திட்டவட்டமாகத் தெரிந்தது. ஆகவே தனது மகனைக்கனகத்திடமிருந்து சில நாட்களுக்குப் பிரித்து வைக்கவேண்டும் என்பது அவரது எண்ணம். ஆகவே அவர் தனக்கு உடல்நிலைமோசம் என்றும், தனது உயிர் சிலமணி நேரங்களில் பிரியக்கூடும் என்றும் கருத்துப்பட ஒரு தந்தி அனுப்பினார்.

தந்தையின் தந்தி பெற்ற கமலக்கண்ணன் எப்படியும் தந்தை இறக்கும் முன் அவரது முகத்தை ஒரு முறை பார்த்துவிடவேண்டும் என்று எண்ணினான். அதேசமயத்தில் தனது வாழ்வில் ஓருயிராய் விளங்கிய கனகத்தைஅன்றுமாலை மீஞ்சூர் திருவிழாவில் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தான். கமலக்கண்ணன் மனம் இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆயிற்று. ஆயினும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு நேரே கனகத்தின் அக்காள் வீட்டிற்குச் சென்றான். கனகத்தின் அக்காள், கனகம் தனது வீட்டிற்குத்தான் போய் இருப்பதாகச் சொன்னாள். உடனே கமலக்கண்ணன் மீண்டும் தனது வீட்டிற்கு வந்து கனகத்தைப் பார்த்தான். கனகம் வரவில்லை. ஒருவேளை தனதுகடிதப்படி இரயில்நிலயத்துக்குச் சென்றிருக்கலாம் என எண்ணி ஒரு டாக்சியைப் பிடித்துக்கொண்டு இரயில் நிலயத்துக்குச் சென்றான். அங்கே பொன்னேரி லோக்கல் சென்று 15-நிமிடங்கள்தான் ஆயிற்று என்றனர். ஆகவே தனது தந்தையின் உடல்நிலையைக் கனகத்திற்குத் தெரிவிக்க இயலாது மீண்டும் 4-30 மணிக்கு அரசூருக்குப்போகும் வண்டியில் ஏறித் தன் தந்தையைப் பார்க்கச் சென்றான்.

கமலக்கண்ணன் தன் தந்தையின் உடல்நிலையைக் கண்டதும் துடித்து அலறிவிட்டான். உண்மையில் முனுசாமி உடையாருக்கு உடல் நன்றாய்த்தான் இருந்தது. ஆனாலும் ஒரு கயிற்றுக் கட்டிலில், நல்ல கம்பளம் ஒன்றினைப் போர்த்துச் சாய்ந்துபடுத்தவாறுஇருந்து, தன் மகன் வந்ததும் பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்களைச்சுழற்ற ஆரம்பித்தார். உண்மை அன்பால் பிணைப்புண்ட கமலக்கண்ணன், இக்காட்சி உண்மை என்றே எண்ணி, தன் தந்தையின் பரிதாப முடிவு நிலையைக் கண்டு விம்மி விம்மி நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தான். தன் அன்புருவத்தை அதே வேளையில் ஏமாற்றிய ஏக்கமும் உடன் கலக்கவே அவனது நெஞ்சம் உடைந்து பெருவருத்தத்திற்கு ஆளானான். முன்னமே இரத்த அழுத்த நோயால் வருந்தி இருந்ததினால், இந்தப் பேரதிர்ச்சியை அவன் மனமும், உடலும் தாங்க இயலாமல் துவண்டன. சிறிது நேரம் கழித்து அப்படியே மயக்கம்போட்டுவிழுந்தான். கமலக்கண்ணன் மயக்கத்தில் குப்புறப்படுத்தவன் படுத்தவன் தான். ஒரேபடுக்கையாய்ப் படுத்தே விட்டான். சிலமணிநேரம்கழித்துத் அவன் தந்தையே எழுந்து வந்து தட்டிஎழுப்பினார் கமலக்கண்ணனை. பாவம்கமலக்கண்ணன் அங்கு இருந்தால்தானே. அவன் உயிர் பிரிந்து இரண்டு மணி நேரத்திற்குமேல் ஆகிறது. தந்தையின் சாதிவெறி நாடகத்திற்கு மகன் பலியானான்,

* * *

மீஞ்சூர் நெருப்புத் திருவிழாவில் கமலக்கண்ணனை காணாத ஏக்கத்திலே அண்ணனுக்கும் அண்ணிக்கும் சொல்லாமல் மீண்டும் சென்னையைஅடைந்து டாக்சி வைத்துக்கொண்டு கமலக்கண்ணன் வீட்டிற்குச்சென்ற கனகம், அங்கே கமலக்கண்ணனைக் காணாது மிகவும் துன்புற்றாள். மீண்டும் அங்கிருந்து நேரே தன் கல்லூரித் தலைவியிடம் சென்று தான் மேல்நாட்டுப் படிப்பிற்குப் போக முடியாது என்று சொல்லிவிட்டு, அங்கு தலைவியின் மறுகேள்விக்குக்கூடக் காத்திராது மீண்டு, தனது அக்காள் வீட்டிற்கும் போகாது நேரே கடற்கரைக்குச் சென்று கடல் ஓரத்தில் உட்கார்ந்து கடல் அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இரவு 10 மணி ஆனதும் தன் மனத்தின் ஆழத்தில் இருந்து ஒரு விம்மல் வந்தது.

விம்மலுக்குகிடையே கனகம் எழுந்து நின்று தன் கண்களில் இருந்து இரண்டு சொட்டு நீரைக் கடல் நீரோடு கலக்கச் செய்து, பின்னர் சிறு துண்டுக்கடிதத்தைத் தன் கைப்பையிலிருந்து எடுத்து அதில், சாதி வெறிகொண்டு இரண்டுகாதல்உள்ளங்களைப்பிளவு படுத்திய சமுகம் என்ன பதில் சொல்லும்?' என்று வினாக்குறியிட்டு எழுதி, மீண்டும் கடிதத்தை அந்தப் பையிலேயே போட்டுக் கரையில் வைத்துவிட்டு, கடலைத் தழுவி முத்தமிட்டாள்.

இந்த இரு காதலர்களின் முடிவைக் காணும் சமுகத்தைப் பார்த்து, சமுகம் பதில் சொல்லுமா? என்று மீண்டும் கேட்பதல்லால் வேறு என்ன செய்ய இயலும்?

★

தமிழோசை-3

பௌத்தர் வளர்த்த தமிழ்

உணவை உண்பதே உயிரை வாழவைக்கும் வழியாகாது; உண்ட உணவைச் சீரணித்துக் குருதியாக மாற்றினால்தான் உடல் வளரமுடியும். அன்றியும் கிடைத்த உணவுப் பொருளைச் சீரணித்துத் தன் வயமாக்கும் தன்மை பெருத உடல் நிலைப்பதில்லை; அழிவதுண்மை அன்றோ? அவ்வாறே தான் மொழியும். பற்பல காலங்களிலும் தோன்றும் பலவகையான மாறுதல்களை ஏற்று வாழ்வதே உயிரோட்டமுள்ள மொழியாகும். தமிழ்நாடு பலவகை மாறுதல்களைக் கண்டது. தமிழ் மொழியும் அம் மாறுதல்களுக்கேற்பக் கலந்து உருப்பெற்று வளர்ந்து வருகிறது. இத் தன்மையே, இம்மொழி காலத்தை வென்று இயற்கைபோல வழங்கி வருவதற்குத் துணைபுரிகின்றது. வந்த வந்த மாறுதல்களோடு கலந்துகுழைந்து காலத்திற்கும் மக்கள் மன நிலைக்கும் ஏற்ப நெகிழ்ந்து உருவாகி வந்த இந்தப் பெருமையே, இந்த மொழி இன்றும் வாழும் மொழியாய் விளங்குதற்குக் காரணம் ஆகும்.

தமிழ்நாட்டில் வந்து புகுந்தவர் பலர்; அவர்கள் கொண்டுவந்த மொழிகள் சில. அம் மொழிகள் அவர்கள் அளவில் அடங்க, அவர்கள் எண்ணிய எண்ணங்களைத்தான் கூறித் தன் கன்னித் தன்மை சிறிதும் கலங்காது உயிர் ஓவியமாகத் தமிழ் மொழி உலாவி வருகின்றது.

தமிழ் மொழி, பிறமொழிகள் போல் மொழிக்கடன் பெற்று வாழும் நிலையில் இல்லாததால், தமிழ் நாட்டில் புகுந்த எந்த மொழியும், தமிழைத் தன் பக்கம் ஈர்க்க முடியவில்லை.

பண்டை நாளில் பல மதத்தினர் தமிழ்நாட்டிற்குத் தம் மதக் கருத்துக்களைப் பரப்ப வந்தனர். அவருள் பௌத்த மத நெறியினரும் ஒருவர். அவர் தம் தமிழ்த்தொ[illegible]டினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

புத்தர் பிறப்பதற்கு முன்பே புத்தரைப்பற்றிப் பல கதைகள் வடநாட்டில் வழங்கிவந்தன. அவை புத்த ஜாதகக் கதைகள் எனப்படும். கி. மு. ஐந்தாம் நூற்றுண்டிற்கு முன்பு வழக்கிலிருந்த அக்கதைகள் கி. மு. நான்காம் நூற்றுண்டிற்கு முன்பின்னுக எழுதிவைக்கப்பட்டன. அக்கதைகளுள் ஒன்று 'போதி சத்துவராகிய புத்தரின் அவதாரங்களுள் ஒன்றில், அவர் அகிதி என்னும் பெயருடன் பிறந்து காசிக்கருகேயுள்ள ஓரிடத்தில் தவம்செய்தனர் என்றும், மக்கட்பெருந்திரள் அவர் தனிமைக்குக் கேடு உண்டாக்கிய காரணத்தால் அவ்விடத்தினின்றும் நீங்கித் தமிழகத்திலுள்ள காவிரிப்பூப்பட்டினத்துப் பூங்கா ஒன்றில் தங்கியிருந்தனர் என்றும் கூறுகின்றது. இக்கதை மிகப் பழங்காலத்தில் பௌத்தர்கள் தமிழ் நாட்டினை அறிந்திருந்ததை அறிவிக்கின்றது.

இராசாக்கண்ணனுர்
எம். ஏ., பி. ஓ. எல்.,

சிங்கப்பூர் 'தமிழ் முரசு'
மலர் மூலம் தந்த
கருத்து.

தென்பாண்டி நாட்டில் மதுரை மாவட்டத்தில் பல குகைகள் காணப்படுகின்றன. இக் குகைகளில் பௌத்த மதப்பிக்குகள் [துறவிகள்] படுத்துறங்குவதற்காகப் பாறைகளில் செதுக்கப்பட்ட படுக்கைகளும் அப்படுக்கைகளின் கீழ்ச் சில எழுத்துக்களும் இ[illegible]கின்றன. படுக்கை அமைப்பு, கு[illegible]ன் அமைப்பு, எழுத்துக்க[illegible]வ கி. மு. மூன்றும் நூற்றுண்டினைச் சேர்ந்தவை என ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர். இப்படுக்கையின் கீழ் உள்ள எழுத்துக்கள் அசோகர் காலத்துக் கல்வெட்டுச் சாசனங்களின் எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. மேலும், மிகப் பழங்காலத்தில் இலங்கைத் தீவில் பௌத்தத் துறவிகள் தங்குவதற்கு அமைக்கப்பட்ட குகைகளில் உள்ள படுக்கை அமைப்பைப்போல இக் குகைப் படுக்கை அமைப்புக்களும் இருக்கின்றன. எனவே கி. மு. மூன்றும் நூற்றுண்டை இவை சேர்ந்தன என்பதற்குஐயம் யாதும் இல்லை. இவ்வுண்மை கி. மு. மூன்றும் நூற்றுண்டில் தமிழகம் பௌத்தர் வாழிடமாக அமைந்ததைக் காட்டுகின்றது.

அசோகர் காலத்தில்

அசோகர் காலத்தில் (கி. மு. 273—232) தமிழ்நாட்டில் பௌத்த மதம் பரவி இருக்க வேண்டும் என்று கருதற்குரிய சான்றுகளும் கிடைத்திருக்கின்றன. சௌராஷ்டிர நாட்டிலுள்ள கிர்னர் நகரத்துக் கருகில் அமைந்த பாறை ஒன்றில் எழுதப்பட்ட அசோக சாசனத்தில் கீழ்க்கண்ட பகுதி காணப்படுகிறது.

"அரசர் பெருமானுடைய (அசோகருடைய) ஆட்சிக்குட்பட்ட எல்லா இடங்களிலும், ஆட்சி எல்லைக் கப்பாற்பட்ட சோழ, பாண்டிய' சத்திய புத்ர, கேரள புத்ர, நாடுகளிலும் தாமிரபரணியிலும் (இலங்கை) அதற்கப்பாற்பட்ட நாடுகளிலும் கருணையும், பெருமையும் பொருந்திய அரசரால் (அசோகரால்) இருவகை மருத்துவச் சிகிச்சைகள் ஏற்படுத்தப்பட்டன. அவை மக்களுக்கும் கால்நடைகளுக்கும் அமைக்கப்பட்ட இருவகை மருத்துவ நிலையங்களாம்!"

இச் சாசனம் தமிழ் நாட்டிலும்

ஏனைய நாடுகளிலும் அறநெறி நின்ற அசோக மன்னரால் மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்ட செய்தியைக் கூறுகின்றது. பெஷாவர் நகரத்துக்கருகில் காணப்படும் மற்றொரு சாசனம் போரில் மக்களைக் கொன்று பெறும் வெற்றியைவிட ஆன்ற அறநெறியை மக்களுக்கு அறிவுறுத்திப் பெறும் அற வெற்றியே தலை சிறந்தது என்பதனைத் தம் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் அசோக மன்னர் உணர்த்திய செய்தியுடன் விளங்குகின்றது.

'அறவெற்றிஎன்னும் வெற்றியே மாண்புமிக்க மன்னரால் (அசோகரால்) சிறந்த வெற்றி எனக் கொள்ளப்படுகிறது. இவ் வெற்றி இந்த இராச்சியத்திலும், இதற்கப்பாற்பட்ட......... தேசங்களிலும், இப்பால் தெற்கேயுள்ள சோழ, பாண்டிய, தாமிரபரணி (இலங்கை) வரையிலும் அரசரால் அடிக்கடி கைப்பற்றப்பட்டது.'

கூறிவந்த சாசனங்கள் வழியாகப் பௌத்த மதம் தமிழ் நாட்டில் பரவத் தொடர்பு கொண்ட முறையை ஒருவாறு அறியலாம்.

இலக்கியத்தில்

கடைச்சங்க காலம் இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு என்பது ஆராய்ச்சி அறிவுடை அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட உண்மை. அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் பல. அவற்றுள்ளே பத்துப்பாட்டில் அமைந்த மதுரைக் காஞ்சியிலும்' செந்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரத்திலும், மற்றும் பல பாடல்களிலும் பௌத்த மதம் பற்றிய குறிப்புக்கள் பல காண்கின்றோம். மணிமேகலை பௌத்த மதத்தின் கலங்கரை விளக்கமாக நின்று காட்சி தருகின்றது. நாதகுத்தனார் (நாதகுப்தனார்) எனும் புலவர் இயற்றிய குண்டலகேசி எனும் காவியம் அடுத்துத் தோன்றி விளங்கிற்று. தொடர்ந்து எழுந்த வீர சோழியம் இலக்கணத் துறையில் பொருந்திச் சிறக்கின்றது. மேலும் புத்த பெருமானின் பெருமையைக் கூறும் பல நூல்கள் தமிழ் மொழியில் எழுந்தன. நீலகேசி, வீரசோழியம், சிவஞான சித்தியார் — இந்நூல்களின் உரையில் பௌத்த மதச் செய்யுள்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அவை எந்தெந்த நூலினின்றும் எடுக்கப்பட்டன என்பது இப்பொழுது பெரும்பாலும் அறியக்கூடவில்லை. எடுத்துக் காட்டுகளாக காட்டப்பட்டவற்றினின்றும் குண்டலகேசி, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், விம்பசாரர் கதை எனும் நூல்கள் தமிழில் வாழ்ந்திருந்தன என்று அறிகின்றோம். தமிழ் இலக்கியச் செல்வத்தின் ஒரு பகுதியாகிய இப்பௌத்த நூல்களை நாம் இழந்துவிட்டோம். மதப் போராட்டமே இவ்விழப்புக்குக் காரணமாக இருத்தல் வேண்டும்.

கிடைத்துள்ள நூல்களைப்பற்றிச் சிறிது சிந்திப்போம்.

மணிமேகலை

தமிழர் போற்றிக் கொள்ளும் ஐம்பெருங் காவியங்களுள் மணிமேகலை, குண்டலகேசி என்பன பௌத்த புலவர் பெருமக்களால் இயற்றப்பட்டன. மணிமேகலை என்ற அரிய காவியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவர் பௌத்தர் என்பதற்கு இவருடைய சாத்தனார் என்ற பெயரே சான்று பகரும். 'சாஸ்தா' என்பது புத்தருக்குரிய பெயர்களுள் ஒன்று. அது தமிழில் 'சாத்தன்' என்று வழங்கும்.

சாத்தனார் மணிமேகலையை இயற்றியதுமட்டுமன்றி, வேறு சில செய்யுட்களையும் பாடி இருக்கின்றார். சங்கத் தொகை நூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நூல்களில் இவருடைய பாடல்கள் காணப்படுகின்றன. இவர் இயற்றிய மணிமேகலை என்ற காவியம் மத வெறியை வென்று காலத்தையும் தின்று, இந்நாள்வரை நின்று நிலவி வருகிறது.

மணிமேகலை சொல்வளமும், பொருள் ஆழமும் சிறந்து விளங்கும் இலக்கியம். பண்டைத் தமிழ் நாட்டின் வரலாறு, நகரங்கள், கலை, நாகரிகம், சமயங்கள் முதலியவற்றை அறிவிக்கும் அறிவுக் கருவூலம். இந்த இன்பப் பெட்டகத்தில் தமிழ் நாட்டின் இயற்கை எழில், மக்கள் பண்பாடு முதலியன சுவை மலிந்து விளங்குகின்றன.

கோவலனுக்கும் குற்றம்ஒன்றும் அறியாத மாதவிக்கும் மகளாகப் பிறந்தவள் மணிமேகலை. இவள் தாயாகிய மாதவியைவி[illegible] அழகில் மிக்கவளாய் இருந்[illegible] நெறியில் நின்று பௌத்த மதத்தை உணர்ந்து பௌத்த பிக்ஷுணி (பிக்கு) ஆக விளங்கினாள். இம் மகள் ஒருத்தியே பேரும் புகழும் பெற்ற பௌத்த பிக்ஷுணியாகச் சிறந்தாள் எனத் தெரிகிறது. இப்பெரு மகளின் வாழ்க்கையைக் கூறுவதே மணிமேகலை என்ற நூல்.

கோவலன் மதுரையில் இறந்த செய்தி மாதவியைத் துறவறம் ஏற்கச் செய்தது. தன் வயிற்றில் பிறந்த மகளாகிய மணிமேகலையையும் தன்னைப்போலவே ஒழுங்குற்ற நெறியில் செலுத்தக் கருதிய மாதவி அவளையும் உடன்கொண்டு மாதவர் உறையும் பௌத்தப் பள்ளியினைச் சார்ந்தாள்.

அந்நாளில் சோழநாடாண்ட மன்னன்மகன் உதயகுமரன் மேகலையிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தான்.

'ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ;
பேடியர் அன்றே பெற்றியில் நின்றிடின்'

எனச் சுதமதி மணிமேகலையின் பேரழகைப் பாராட்டுகின்றாள் என்றால், உதயகுமரன்உள்ளம் தடுமாறியதில் பெரிதும் வியப்பில்லை!

மலர் பறிக்கச் சென்ற மங்கை நல்லாள் மேகலையைத் தொடர்ந்து சென்றான் சோழன் மகன்; பழிப்புரை பல பகன்றான். பளிக்கறை புக்குத் தன் உடலை மேகலை மறைத்தாள்; ஆனால் அவள் உள்ளம் இழித்துக் கூறிய இளங்குமரன் பின் சென்றது. காரணம் அறியாது திகைக்கின்றாள் மணிமேகலை; காமத்தியற்கை இதுபோலும் என வியக்கின்றாள்.

'சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு'

எனும் முதுமொழி உணர்ந்த மேகலை தன் நெஞ்சைத் தன்னுடன் ஈர்த்திழுத்துக் கொண்டாள். நெஞ்சினை—நெஞ்சில் ஓடும் நினைவுகளை வென்று வீர மகளாக மேகலை விளங்க, ஓடிய நெஞ்சின் வழியே ஓடுகின்றவனாக உதயகுமரன் ஆனான். எனவே மாற்றுருவத்தில் மணிமேகலை திரியவேண்டியவளானாள். காய சண்டிகை என்ற வித்தியாதரப் பெண்வேடம் தாங்கிய தவமகளை உதயகுமரன் ஒளிந்து பற்ற முற்பட்டான். காய சண்டிகையின் கணவனாகிய காஞ்சனன் உண்மை உணராது தன் மனைவியைத் தொடர்கின்றான் ஒருவன்

முக்கிய அறிவிப்பு

நமது அலுவலகத்திற்கு வரும் கடிதங்களும் மணி ஆர்டர்களும், முகவரி எழுதும்போது சின்னக் காஞ்சிபுரம் என்று எழுதாமல், காஞ்சிபுரம் என்று மட்டுமே எழுதப்படுவதால், மிகவும் காலதாமதமாகிறது. ஆகையால், கடிதம் எழுதுபவர்களும் பணம் அனுப்புபவர்களும்,

மானேஜர்
திராவிட நாடு அலுவலகம்
சின்னக் காஞ்சிபுரம்
(Little Kancheepuram)

என்று அவசியம் எழுதும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்
'திராவிட நாடு'

எனக் கருதி வாள் வீசிக் கொன்று விட்டான். உதயகுமரன் இறந்தான். இதுகண்ட மேகலை கண்ணீர் உகுத்தாள்.

புலனை வென்ற உள்ளம் மணிமேகலையின் உள்ளம்; எனினும் சிறிது சலித்தது; நடுங்கிற்று; நைந்தது; ஏன்? தன்னை மலர்வனத்தில் இழித்துரைத்தவன் இறந்தபோது உள்ளம் உளைந்ததற்குக் காரணம், பண்டைப் பிறப்புக்களில் இவ்விருவரும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வந்த தொடர்பு என்று சாத்தனார் கூறுகின்றார்.

சோழன் தன் மகன் வெட்டுண்ட செய்தியைக் கேள்வியுற்றான். மன்னர் குலத்திற்கே மாசூட்டிய தன் மகன் செய்தி மற்றவர் காதில் விழுவதற்கு முன்னம் மகன் உடலைச் சுடுகாட்டிற்குக் கொண்டு போகக் கட்டளையிட்டான். மகன் இறப்பதற்குக் காரணமாகிய மணிமேகலையைச் சிறையில் இடுவித்தான்.

மன்னன் மனைவி இராசமாதேவி மேகலையைத் தன்னிடத்துக் கொண்டு போய் மாயம் பல செய்தாள். மேகலை அத் துன்பங்கள் எல்லாவற்றையும் கடந்து நின்றாள். இந்நிலையறிந்த இராசமாதேவி, "மகனை இழந்து மனத் தடுமாற்றத்தால் பிழைபல செய்தேன்; மன்னித்தருள்க" என மணிமேகலையை வேண்டி நின்றனள். மேகலை அவள் துன்பத்தை ஒழிக்கும் நெறியில் உண்மைப்பொருளை எடுத்துக் கூறி அருளறத்தைக் கடைப்பிடிக்குமாறு செய்தனள்.

"உடற்கழு தனையோ? உயிர்க்கழு
தனையோ?
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே?
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர்
வரியது
அவ்வுயிர்க் கன்பினையாயின்ஆய்தொடி!
எவ்வுயிர்க் காயினும் இரங்கல்வேண்டும்',

என்பது அம்மெய் உரையாம்.

இவ்வரிகளில் காணும் பொருள்; 'உடலை இழந்து அழுதாயோ; அன்றி உயிரை இழந்து அழுதாயோ; உடலுக்காக என்றால் அவ்வுடலைச் சுடலையில் இடங் கொடுத்தது யார்? நீயல்லவா? அல்லாமல் உயிருக்காக அழுதேன் என்றால், அவ்வுயிர் அழியாதது. அது செய்த வினைக்கேற்ப வேறு ஓர் உடலுள் புகுந்திருக்கும். அவ்வுடலை அறிந்து கொள்ளுதல் நம்மால் இயலாது. அந்த உயிருக்கு அன்பு செய்யவேண்டும் என்றால், உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் இரக்கம் காட்டவேண்டும். அவ்வாறு இரங்குவாயே ஆனால் பலவாக அமைந்துள்ள இந்த உலகத்து உயிர்த் தொகுதிகளுள் ஒன்றாக அமைந்திருக்கும் நின் மகனுக்கும் அன்பு செய்தாயாகுவாய்' என்பதாம். இவ்வாறு இராசமா தேவியின் துன்பம் ஒழிதற்குரிய நெறியைக் கூறி, அதன் முகமாக 'அருள் அறத்தை' மேற்கொள்ளுமாறு செய்த மணிமேகலையின் நுண்ணறிவுத் திறன் போற்றற் பாலது.

அருளறமே புத்த மதத்தின் உயிர் நிலை. இப்பண்பு தமிழ் மக்களும் என்றும் போற்றி வளர்த்த ஒன்று. 'தமக்குத் தீங்கிழைத்தவருக்கும் நலம்செய்து அவர் நாணுமாறு செய்தல் வேண்டும்; தீமை செய்தார்க்கும் நலம் புரியாவிடத்துச் சால்புதான் என்ன பயனைத் தரும்?' இவ்வாறு கூறுவது தமிழ் மறை.

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நாண நன்னயஞ் செய்து விடல்'

'இன்னா செய்தார்க்கும் இனியவே
செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு'

இக் குறள்களுக்கு எடுத்துக் ... ணிமேகலையின் பொருளுரை மலர்கின்றது. தனக்குத் தீமை செய்த மன்னன் மனைவி, மாதேவிக்கு மாசற்ற நலம் புரிந்து அருளறத்தை வாழ வைக்கும் மணிமேகலையின் செயல் மிகப் பெரிய அருஞ் செயலே!

குண்டலகேசி

இந்நூலை இயற்றியவர் நாதகுத்தனார் என்ற புலவர் என அறியப்படுகிறது.

குண்டலகேசி காப்பியத்தலைவி புத்தர் வாழ்ந்திருந்த காலத்தே வடநாட்டில் வாழ்ந்திருந்தவள். இப்பெருமகளின் வரலாறு, பாலி மொழியில் அமைந்த 'தேரி காதை'யிலும் நீலகேசி என்னும் ஜைனத் தமிழ் நூல் உரையிலும் கூறப்பட்டிருக்கின்றது.

இராசக்கிருகம் என்னும் நாடாண்ட மன்னனின் மந்திரிக்குப் பிறந்த பெண் குழந்தைக்குப் பெயர் பத்திரை. இவள் வளர்ந்து பருவம் எய்திய காலத்தே மாளிகையின்மேல் தன் தோழியருடன் உலாவி நின்றாள். அதுபோது வழிப்பறி செய்த குற்றத்திற்காகக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட கட்டழகு மிக்க காளை ஒருவன் வீதி வழியே காவலர்களால் இழுத்துச் செல்லப்பட்டான். காளையைக் கண்ட பத்திரை கருத்தழிந்தாள். 'என் நெஞ்சினைக் கவர்ந்த அக்கள்வனையே மணப்பேன்; இன்றேல் இறப்பேன்' என்ற பத்திரையின் பிடிவாதத்தினைக்கேட்ட அவள் தந்தை கொலையாளருக்குக் கைக்

கூலி கொடுத்து அக்கள்வனைக் கொணர்ந்து மகளுக்கு மணம் புரிவித்தான்.

ஒரு நாள் ஊடிய பத்திரைவாய் காவாது தன் கணவனை நோக்கிக் 'கள்வன்' எனக் கூறினாள். கேட்டவன் கிளர்ந்தெழும் சினத்தை உள்ளத் தடைத்தான். மற்றொரு நாள் தன் உயிர் காத்த கடவுளை வணங்குவதற்குச் செல்ல வேண்டும் என்று கூறித் தன் மனைவியை ஒரு மலையுச்சிக்கு அழைத்துச் சென்று 'அன்றென்னைக் கள்வன் என்றாய்; இன்றுன்னைக் கொல்லப் போகிறேன்; நீ வழிபடும் கடவுளை வணங்கிக்கொள்' என்றான். கேட்டுத் திடுக்கிட்ட பத்திரை 'தற்கொல்லியை முற்கொல்க' எனும் மூதுரையை நினைத்து காதலைக் கொன்று 'நான் வழிபடும் தெய்வம் தனியே வேறுண்டோ? தாங்களன்றோ அக்கடவுள்' எனக் கூறி அவனை வலம் வருபவளாகப் பின் சென்று அக்கொடியவனைக் கீழே தள்ளினாள்.

கொண்ட காதல் குலைந்து போகவே, உள்ளம் சலித்த பத்திரை ஜைன மதத்தில் சேர்ந்து துறவுபூண்டாள். அந்த மதக் கொள்கையின்படி பத்திரையின் தலைமயிர் களையப்பட்டது. மீண்டும் வளர்ந்த தலைமயிர் சுருண்டிருந்தமையால் பத்திரை குண்டலகேசி என்றழைக்கப்பட்டாள். குண்டலகேசி என்பது 'சுருண்ட கூந்தலை உடையவள்' என்று பொருள்படும்.

ஜைன மதச் சாத்திரங்களில் பேராற்றல் பெற்ற கேசி சமய வாதம் செய்யப் புறப்பட்டாள். அக்காலத்தில் வாதப்போர் செய்வோர் ஊர் நடுவில் நாவல் மரக்கிளையை நட்டு வாதுக்கு அழைப்பது வழக்கம். அவ்வாறே ஒரு நாள் ஓரூரில் நாவல் மரக்கிளையை நட்டுவிட்டு உணவுக்காக வீடு தோறும் பத்திரை சென்றிருந்தாள். அவ்வேளை அங்குவந்த புத்தரின் சீடர்களில் ஒருவராகிய சாரிபுத்தர் நாவல் கிளை கண்டு செய்தி அறிந்து அக்கிளையினைப் பிடுங்கி எறியுமாறு செய்தனர்.

மீண்டுவந்த குண்டலகேசி நடந்ததை அறிந்தாள்; ஊர் அவையைக் கூட்டிச் சாரிபுத்தருடன் வாதம் புரிந்தனள். கேசி கேட்ட வினாக்களுக்கெல்லாம் சாரி புத்தர் விடை அளித்தனர். ஆனால் சாரி புத்தரின் வினாக்களுக்கு விடை கூறத் தெரியாது கேசி மயங்கினள். தோல்வியை ஒப்புக்கொண்டு அவர் காலில் விழுந்து வணங்கி அவரிடம் அடைக்கலம் புகுந்தாள். "என்னிடம் அடைக்கலம் புகாதே; புத்த பகவானிடம் அடைக்கலம் புகுக" என்று கூறி அவளைப் புத்தரிடம் அழைத்துச் சென்று அவரை வணங்கச் செய்தனர். புத்தர் அவளுக்கு அருள் அறத்தைக் கூறிப் பௌத்த மதத்தில் சேர்த்தார்.

இதுவே குண்டலகேசியின் வரலாறு.

நீலகேசி

இந்தக் குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த நூலே நீலகேசி. இன்று நீலகேசி வாழ்கிறது. ஆனால் குண்டலகேசி இறந்துபட்டது. இந்நூலினின்றும் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட சில செய்யுள்கள்உயிர்பிழைத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று.

பாலையந் தன்மை
செத்தும் பாலனந் தன்மை செத்தும்
காளையாந் தன்மை
செத்துங் காமுறும் இளமை செத்தும்
மீளும் இவ் வியல்பு
மின்னே மேல்வரும் மூப்பும் ஆகி
நாளும் நாள்
சாகின்றோமால் நமக்கு நாம் அழாத
தென்னோ"

வீரசோழியம்

இஃதோர் இலக்கண நூல். இதனை இயற்றிய ஆசிரியர் புத்தமித்திரனார் என்பவர். இவரது மாணவராகிய பெருந்தேவனார் இந்நூற்கு உரை எழுதியுள்ளார்.

புத்தமித்திரனார் வாழ்ந்த காலம் இவரை ஆதரித்த வீரசோழ மன்னன் அரசாண்ட காலமாகும். வீரசோழன், வீர இராசேந்திரன் என்னும் பெயருடன் கி. பி. 1063 முதல் 1070 வரை சோழநாட்டை அரசாண்டான்.

புத்தமித்திரனார் இயற்றிய வீரசோழியம், 'வீரசோழியக் காரிகை' என்றும் அழைக்கப்பட்டது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருட்படலம், யாப்[illegible] அலங்காரப் படலம் என்ற ஐந்து பெரும் பிரிவுகளுடன் இந்நூல் விளங்குகின்றது. தமிழ் நாட்டு வரலாற்றை அறிதற்கு இச்சுவடி ஓரளவு துணைபுரிகின்றது. புத்தரைப்பற்றிய அழகான பாடல்கள் பல யாப்புப் படல உரையில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டிற்கு வந்த பௌத்த பெருமக்கள் விரிந்த நோக்கமும், மேன்மையமைந்த பண்பும், உடையவர்; ஆதலின் தமிழ் மொழியைப் பயின்று அம் மொழியிலேயே தம் மதக் கருத்துக்களைக் கூற முற்பட்டு அரிய தமிழ் நூல்களை ஆக்கி அவற்றைத் தமிழ் அன்னைக்கு அணிகலன்களாக அணிவித்தனர். மதப்போரும், மத வெறியும் அவ்வழகிய அணிகள் பலவற்றை அழித்துவிட்டன; எனினும் எஞ்சி உள்ளவை என்றும் நின்று நிலவி அவர் தம் தமிழ்த் தொண்டினை உலகுக்கறிவித்து நிற்கும்,

'பொருந்து போதியில் இருந்த மாதவர்
திருந்து சேவடி மருந்தும் ஆகுமே'

—புத்தரைப் பற்றிய மேற்கோள் செய்யுள் ஒன்று.

மனிதர்கள் மூன்று வகையினர்: கஷ்டங்கள் வருமே என்று பயந்து எந்த ஒரு வேலையையும் தொடங்காமலிருப்பவர்கள் முதல் வகையினர் இரண்டாவது வகையினர் அதிலும் சிறிது மேம்பட்டவர்கள். அவர்கள் உற்சாகமாகவேலையைத் துவங்குவார்கள்; ஆனால் கஷ்டமேற்பட்டவுடன் வேலையை கைவிட்டுவிடுவார்கள். மூன்றுவது வகையினரே மற்றிரு வகையினரிலும் சிறந்தவர்கள். எத்தனை கஷ்டங்கள் தடங்கல்கள் ஏற்படினும் தாங்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும்வரை காரியத்தை கைவிடாது ஓய்வு ஒழிவின்றி உழைப்பார்கள்.

*

தூய உள்ளங்களிலேதான், அழகு வந்து குடியிருக்க முடியும். களங்கம் நிறைந்த உள்ளங்களிலே கற்பனைத் திறனோ அழகோ நிலைத்து நிற்க முடியாது.



2

காதல் மொழிகளால் கண்கள் பேசத் துவங்கியதும் இன்பங் கலந்த வெட்கம் பூங்கோதையின் உடலில் பாய்ந்தது. வெட்கத்தால் விளையும் விளையாட்டுச் செய்கைகள் காண்பதற்கு மகிழ்ச்சியாகத் தானே இருக்கும். முறுவல் பூத்த இதழ் இடையே முத்துப்பல் காட்டி நாணத்தால் பொலிவு மிகுதியாகித் தலைசாய்த்துத் தையல் அவள் நிற்கையிலே, அவன் சிலையாக எத்தனை நாள்தான் நிற்பான். "கலைமாதே, ஒரு முத்தின் விலையாதோ" என்று சிலேடையாய் அவன் வினவ, உடலில் உள்ள குருதியெல்லாம் திடீரென்று சுவையேறிச் சுற்றுவதுபோல் உணர்ச்சி பெற்று "உன் அன்பிற்குப் பரிசாகக் கிடைக்குமன்றிப் பொன்னுக்கும் பொருளுக்கும் கிடைக்கும் கடைச்சரக்கல்ல" என்றவள் கடைக்கண் பார்வை சொல்லும். கண்ணம்மா இல்லாத வேளையிலே பூங்கோதையின் கன்னத்திலே தன் அன்பின் அடையாள முத்திரையை அவனும் பதிய வைப்பான். அவளும் ஆசையோடு ஏற்று நன்றி தெரிவிக்கும் வகையில் நடந்துகொள்வாள்.

பூங்கோதைக்கும் தன் அண்ணனுக்கும் இடையில் தோன்றியுள்ள காதலைக் கண்ணம்மா அறியாமல் இல்லை. அறிந்து கேலி செய்து வந்தாள். "பூங்கோதையின் கன்னத்தில் குருதி குழம்பியுள்ளதே, ஏன்?" என்று தன் அண்ணனைக் காரணம் கேட்பாள். "இந்த அறையில் உள்ள பல்லி ரொம்பப் பொல்லாததடி. நான் இந்த அறையைவிட்டு நகர்ந்தால் "இச் இச்" என்று சத்தம் போடுகிறது" என்று பூங்கோதையிடம் சொல்லிக் கிண்டல் செய்வாள்.

கொடி, முதலில் கொம்பைத் தழுவும்போது இலேசாகத் தழுவினாலும், கொஞ்ச நாளில் இறுகப் பிடித்துக் கொள்கிறது. அது போல்தான் காதல் கொண்ட உள்ளங்களும். சந்தர்ப்பம் பயிரிட்ட உறவு, காலத்தால் பலம் பெற்று வந்தது.

பூங்கோதை வரத் தாமதமானால் போதும், கண்ணம்மாவைக்கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டேயிருப்பான் கண்ணன். அவள் வரவில்லையென்றால், நீரினின்றும் எடுக்கப்பட்ட மீன்போல் துடிப்



பா[illegible] வேளைகளில் கண் [illegible]ல் செய்து களிப் பாள். அவனும் பொய்க்கோபம் கொண்டவனாய் அடிக்கப்போவான்.

காதலர்கள் பார்வையிலேயே இன்பம் ஊட்டும் போதை ஊற்றெடுக்கும் போலும்! இல்லையேல் பார்வையிலேயே மகிழ்ச்சியை எப்படிப் பரிமாறிக்கொள்ள முடியும்? அகிலை அரைத்தால்தான் மணம் கமழும்! பாலைக் காய்ச்சிச் சாப்பிட்டால்தான் சுவை மிகும்! ஆனால் 'காதல்' நினைத்தாலேயே இனிக்கும் போலும்! இல்லையேல் அதன் நினைவுகள் எல்லாம் எப்போதும் இனிக்குமா? இந்த இனிப்பான நினைவுகள் கண்ணன் உள்ளத்தில், பூங்கோதையின் நெஞ்சில் ஊறிய வண்ணம் இருந்தன.

வாய்மை இருக்கும் இடத்தில் தூய்மை இருக்கும் என்பார்களே, அதேபோல்தான் மகிழ்ச்சி இருக்கும் இடத்தில் அழகு கொலுவிருக்கும். மெருகிட்ட பொன்னில் பதிந்துள்ள வைரம் மிகுதியாய் மின்னுவது இயற்கைபோலும்! பருவத்தின் கரத்தால் பூட்டப்பட்ட அழகு அணிகலன்கள், இன்ப நினைவுகள் காரணமாகப் பன்மடங்கு அழகாகத் தோன்றிற்று. வண்ண மயிலுக்கு, வசந்தகாலக் குயிலின் குரல் இருந்தால்......! மெருகிட்ட தங்கச்சிலை போன்ற பூங்கோதையின் நெஞ்சில் இன்ப நினைவுகள் குடியேறினால்...! இன்ப நினைவுகளால் இரத்தமெல்லாம் சுவையேறி, அதன் காரணமாக நரம்பெலாம் புத்துணர்ச்சிபெற்று, அதனால் உடலெல்லாம் பூரிப்புக் கதிர்கள் பாய்ந்தால் அழகுக்குக் கேட்பானேன். பூங்கோதை அழகுக் கலையின் கொலுமண்டபு

மர்னுள்! கண்ணன் கட்டழகன் ஆனுன்!

நாளெலாம் சுவையோடு கழிந்தன. நேரமெலாம் மகிழ்வோடு நகர்ந்தன. மங்களத்தின் தலை மறைந்தால் தங்கைக்கு ஏதாவது வேலையிட்டு, தளிர்கொடியாள் பூங்கோதையின் தேனூறும் அதரச் சுனைகளைச் சுவைக்கத் துவங்கிவிடுவான்; இடையிலே தங்கை வந்துவிட்டாலோ பொய்க் கோபத்தைப் போர்த்திக்கொண்டு வேறுவேலையிடுவான். இவன் வேர்ப்பலாவைச் சுவைப்பான். சுவைக்கும் காட்சியைக் கண்ணம்மா கண்டுவிட்டாலோ, அவன் வார்த்தை தடுமாறும்......... அவள் உடல் நடுங்கும்......... இருவருமே தடுமாறியவாறே நகர்வார்கள். உடனே அந்தக் குறும்புக்காரி "ஏன் இருவரும் இப்படித் தள்ளாடுகிறீர்கள் ... ஏதாவது போதைச் சரக்குச் சாப்பிட்டீர்களா? ஜாக்கிரதை! போலிசாருக்குத் தெரிந்தால் ஆபத்து!'' என்று கேலி செய்வாள். அல்லது "கள்ளச் சாராயம் சாப்பிட்டால் ஆறு மாதம் சிறைத் தண்டனையாம்... காதல் சாராயம் சாப்பிட்டால் தண்டனை இல்லையா'' என்பாள். அவனும் சமாளித்துக்கொண்டு "ஏன் இல்லை?... ஆயுள் தண்டனை!'' என்று சொல்லிச் சிரிப்பான். வெட்கத்தால் பூங்கோதை பூமியை நோக்குவாள். "ஆயுள் தண்டனை அனுபவிக்கப் பூங்கோதை துணிந்தால் "அண்ணி'' என்ற பட்டத்தை வழங்கி நாம் கௌரவிப்போம்'' என்று கண்ணம்மா கூறுவாள். சிரிப்பொலி கிளம்பும்.

இப்படித்தான் இவர்களின் நாட்கள் ஓடின. சென்னையில் மருத்துவக் கல்லூரியில் பயின்று வரும் முத்துவிடமிருந்து கண்ணனுக்கு அடிக்கடி கடிதம் வரும். முத்து விடுமுறைக்காக வீடு திரும்பிய போதெல்லாம் கண்ணன் வீடு வராமல் இருந்ததில்லை. அங்கே பூங்கோதையைப் பார்த்திருக்கிறான் பல முறை. இனிக்கும் சிலையாக, இன்பக் கலையாக அவள் தோன்றினாலும், அவன் கண்கள் கண்ணம்மாளைக் காண்பதில்தான் திருப்தியுற்றன. கண்ணம்மாளும் முத்து இருக்கும் பக்கம் வருவாள், காரணம் இல்லாமல்! போகும் போதும் வரும்போதும் கடைக்கண்ணால் நோக்குவாள் தன்னையும் அறியாமல்! இருவர் உள்ளத்திலும் பாசத்தின்சாயல் தென்பட்டாலும், அதை வளர்க்கவேண்டுமென்ற ஆசை, துணிவு இருவருக்குமே இல்லை. சென்னையிலிருந்து முத்துவின் கடிதம் வந்தால், அதைத் தன் அண்ணன் இல்லாத வேளையில் படிப்பதிலே ஒரு சுவை கண்டாள்! இருவர் நெஞ்சிலும் 'காதல்' நிழல் உருவில் இருந்ததேயொழிய, உண்மை வடிவம் எடுக்கவில்லை.

(தொடரும்.)

4-ம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிஸ்டுகளுக்கும், கம்யூனிஸ்டுகளால் நிறுவப்படும் பொய் அமைப்புகளுக்கும் உதவி தருகிறார்கள்.

இதுதான், குற்றச்சாட்டு! இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையா பொய்யா என்பது ஒருபுறமிருக்க, இப்படிக் குற்றம் சாட்டுவது காங்கிரஸ்காரர்கள் எனும்போதுதான் விந்தையாயிருக்கிறது.

கண்ணகி, மாதவிமீது குற்றம் சாட்டலாம்! குற்றம் சாட்டுகிறவளே, குடிகேடி எனும்போது, என்ன பொருள்!!

கேரளத்துக் காங்கிரசார் கம்யூனிஸ்டுகள்மீது சுமத்தும் இந்தக் குற்றங்கள் அத்தனையும், காங்கிரசார் அன்றுமுதல், இன்றுவரை தொடர்ந்து செய்து கொண்டிருப்பவைதானே! அப்படிக் கம்யூனிஸ்டுகளே தவறுகிறார்கள் என்றாலும், வரப்போகிற பொதுத் தேர்தலில் வண்டவாளங்களையெல்லாம் எடுத்துச் சொல்லலாமே! அதைவிட்டு, நாடு பூராவிலும் பெரிய கிளர்ச்சிகள் செய்வதேன்! செய்யும்படி தூண்டுவதன் பொருள்தான் என்ன!!

ஒன்று உண்மை. காங்கிரசார், அகில இந்திய காங்கிரஸ் எனும் கட்சியின் மூலம், இந்த அகண்ட பூமிப்பரப்பைத் தங்கள் கைவசமே வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

அகில இந்தியாவிலும் காங்கிரஸ் உடைபட்டு, ஆங்காங்கே உள்ள கட்சிகள் செல்வாக்குப் பெற்று ஆள ஆரம்பித்தால், தங்களது டில்லி, துண்டு துண்டாகும் என்று அஞ்சுகிறார்கள்.

டில்லியிலும் தாங்கள்! மாகாணத்திலும் தாங்கள்!!—என்கிற பரம்பரை பாத்தியதை, சிறிதும் பழுதுபடாமலிருப்பதே, ஏக இந்தியா நிலைக்கும் மார்க்கம் என நம்புகிறார்கள்.

எனவே, எங்காவது ஒரு மாநிலக் கட்சி உருவானால் அதை அணைத்தோ, அழித்தோ, தங்களதாக ஆக்கிக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஒரிசாவிலுள்ள ஞானதந்திரபரிஷத் போல! எங்காவது மாற்றுக் கட்சி, ஆட்சியிலமருமானால் அதற்குப் பல வகையிலும் தொல்லை கொடுத்து, ஒழிக்கப்பார்க்கிறார்கள்!!

கேரளத்தின்மீது, இவ்வளவு ஆத்திரமும் அதிருப்தியும் காட்டக் காரணம் இதுதான். ஆனால், இந்தக் காரணத்தைச் சொல்லுவதற்காக, காங்கிரசாரைவிட கம்யூனிஸ்டுகளுக்கு, நம்மீது அதிகக் கோபம் வரலாம்! ஆனால், ஒன்று, அனுபவிக்கும் போதுதான் டில்லியின் கொடுமை தெரியும்—ஏக இந்தியாவாதிகளின் போக்கு புரியும்!!—கேரளத்துக் கம்யூனிஸ்டுகளுக்கு, அந்தச் சந்தர்ப்பம், அதிகமாகி வருகிறது.

★